


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மறைகின்ற சூரியன்
இரத்தம் சிந்துவதனால்த்தான்
மறுநாளும்
எழுகின்றது.

"வீழ்வது நாமாயினும் வாழ்வது தமிழாகட்டும்"

மூச்சு 2 பெப்ரவரி 2002

கலை இலக்கிய சமூக அரசியல் இதழ்

உள்ளே ....


- தமிழ்வாதம்
- சில தவறுகள் சில தவி(ர்)ப்புக்கள்
- நவம்பர் 17 அதிகாலை
- பகிடிவதை
- பெண் என்று,இன்று
- இனியொரு விதி
- இளைய விவாதிகளே
- அர்த்தம்
- ஆத்ம அருத்தி
- பூவுக்குள் ஓர் நெருடல்
- நினைவுக்குறிப்பு " கலைஞானி "
- செவ்விக்களம்


ஆசிரியர் குழாம்

ஸ்ரீ.தஷந்தி நிரேகா
வி.தர்சினி
க.நிறஞ்சன்
சு.உமாசுதன்
சோ.சேயோன்
க.சயேந்திரன்

மீண்டுமொரு தடவை சமாதான ஒளிக்கீற்றுக்கள் இலங்கைத் தீவினை தீண்ட ஆரம்பித்திருக்கின்றன. கட்டடங்களை மட்டுமல்ல பெறுமதி மிக்க உயிர்களையும், பொருளாதாரத்தினையும் சிதைத்தெறிந்து இக்குட்டித்தீவினை சுடுகாடாக்கிக் கொண்டிருந்த கொடிய யுத்தம் முன்னைய அரசின் முடிவோடு தற்காலிகமாக முடிவுக்கு வந்திருக்கின்றது. ஆட்சி மாறிய கையோடு அரசியல் அரங்கில் காட்சிகளும் மாறத் தொடங்கியிருக்கின்றன. மோதல் தவிர்ப்பு, யுத்த நிறுத்தம், பாதை திறப்பு, தடைநீக்கமென சமாதானத் திருவிழா கோலாகலமாக களைகட்டுகிறது. ஆட்சி மாற்றங்களின் போது நிகழும் வழமையான நிகழ்வுகள் இவை யெனினும் சகலருடைய மனங்களிலும் இம்முறை சற்றே அதிகமான நம்பிக்கைகளையும் எதிர்பார்ப்பினையும் அரசின் ஆரம்ப கால நடவடிக்கைகள் ஏற்படுத்தியிருக்கின்றன என்பது மறுக்க முடியாதது.

இத்தனைக்கும் மத்தியில் இத்தீவின் சாபக்கேடாய், இம்முறையும் சமாதான வெறுப் பார்வலர்கள் தத்தமது பரிவாரங்களோடு களமிறங்கி தெருக்களில் தமது கடைகளை விரிக்கத் தொடங்கிவிட்டார்கள்.

கண்கெட்ட பின்னர் கூட சூரிய நமஸ்காரம் செய்ய முன்னைய அரசு முன்வராததற்கு இக் கடைவிரிப்புக்களும் ஒரு காரணம். இந்நிலையில் புதிய பாராளுமன்றத்தை ஆக்கிரமித்துள்ள புதிய அரசு சமூகத்தின் எதிர்பார்ப்புக்களை செவ்வனே நிறைவேற்றுமா ? நிறைவேற்ற வேண்டுமென்பதே சகலரதும் எதிர்பார்ப்பு ! இன்னுமொரு காலாண்டின் பின்னர் மீண்டும் இணைந்து கொள்வோம் !

20/=
THAMIZHAALAYAM COLOMBO

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் வாதம்

ஸ்ரீ துஷந்தி

தரணியெங்கும் தமிழ் முழக்கம்
தலை நிமிர்ந்த போதும்
தமிழர்களின் தலைகளுக்குள்
தலை தூக்கும் வாதம்

தலை நகரத் தமிழன் - தீவின்
தலை நகரத் தமிழன்
மலை நாட்டுத் தமிழன் - ஒரு
பிரதேசத்தமிழன்
பிறதேசத் தமிழன்
என பட்டியல் நீளும்

தன் தாய் உதரத்தவர்களுடன்
பாசம் கொள்வார் - தமிழ்த்
தாய் உதிரத்தவருடன்
துவேஷம் கொள்வார்

தன் தாய் வயிற்றில்
பிறந்தால் சகோதரன் - தமிழ்த்
தாய் வயிற்றில்
பிறந்தவர் அந்நியரோ ?

நீர் கோர்க்கும் மேக நதி
வேர் பார்த்துத்தான் பொழிகிறதோ ?
பார் போற்றும் தமிழ்நதி
வேர் தேடித்தான் நுழைகிறதோ ?



# நித்தம் நினைவலைகளுடன்

கு. ரஜீவ் நிர்மலசிங்கம்

என் இதயவானில் ஒய்யாரமாக ஒரு பெண்ணிலவு
கண்டபடி வந்து காலநிலை மாற்றம் தருகிறாள்
என் எண்ணப்பட்டங்கள் வானில் நிலவு தேடும்
நெருங்கும் போதெல்லாம் காலக்காற்று வந்து கரைசேர்க்கும்
வெண்முகில் கூட்டத்துள் வெண்நிலா மறையும்
வானம் கருமை சூழும் - இதயம் இலையுதிரும்
காற்று வந்து முகில் கலைக்கும்
கற்பனை முகில்கள் மழைதூவும்
வானம் வசந்தகாலம் கொண்டாடும்
ஒரே நாளில் வானில் பல பருவகால மாற்றங்கள்
தட்டுத் தடுமாறும் என் இதயவானிலே
காதல் கவியெடுத்து நிலவு தேடியபோது
நிலவு தொடும் தூரத்தில் இல்லை
பட்டம் பெறவும் தயாராகி விட்டேன்
எண்ணப்பட்டம் விடுவது மட்டும் தொடர்கிறது.

## எழுதுங்கள் ✍

### உங்கள் சமுதாய சிந்தனையின் வெளிப்பாடாக

உயிர்ப்பு இதழ் உங்கள் அனைவரிடமும் இருந்து ஆக்கங்களை எதிர்பார்க்கிறது. ஆக்கங்கள் உலகளாவிய சமூக, இன விடுதலையின் தேவையினை உணர்த்துவதாய், சமுதாய மேம்பாட்டினை முன்னெடுத்துச் செல்வதாய், இளைய சமுதாயத்தை வழிநடத்திச் செல்வதாய் இருத்தல் வரவேற்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில தவறுகள் சில தவி(ர்)ப்புக்கள்

சு.ஈ. மாசுதன்

"ஆப்பிரிக்கத்துக்காப்பிரி நாட்டிலும்
தென்முனையடுத்த தீவுகள் பலவினும்
பூமிப்பந்தின் கீழ்ப்புறத்துள்ள பற்பல தீவினும்
பரவி யிவ்வெளிய தமிழ்ச்சாதி, தடியுடையுண்டும்
காலுடையுண்டும் கயிற்றடியுண்டும்" என,

இன்றைய தமிழனின் நிலைப்பாட்டினை, நடைமுறை நிதர்சனத்தை, சொந்த இனத்தின் சோகமிகு சிந்தனைகளை, தமிழர்தம் அவலநிலைகளின் சாயல்களை ஆச்சரியகரமாக அனாயாசமாகத் தீர்க்கதரிசனம் கொண்டு சித்தரிக்கின்றான் பாரதி. தீர்க்கதரிசனத்தின் சில இடங்களில் மெய்சிலிர்க்கின்றது! கண்கள் சடுதியாகக் கலங்குகின்றன!

இவ்வாறு பாரதியினை ஒரு தீர்க்கதரிசியாக, சிறுமை கண்டு சீறிய பாவலனாக மிதிக்கப்படும் மனித நேயங்களை அஞ்சாது கடிந்தவனாக போற்றுகின்ற நோக்குகின்ற நாம் பாரதி பாடல்களில் மறைந்துள்ள, இழைந்துள்ள முரண்பாடுகளையும் சற்றே நோக்குவோம். பாரதியின் கவிதை வரிகளை ஆழமான ஆய்விற்கு உட்படுத்திய போது பளிச்சிட்ட, துலங்கிட்ட என் அறிவிற்கெட்டிய சில விடயங்கள் சில தவறுகளாகவும் தவிர்ப்புக்களாகவும் முன்வைக்கப் படுகின்றன.

நிமிர்ந்த நன்னடையுடனும் நேர்கொண்ட பார்வையுடனும் புதுமைப் பெண்களைப் படைத்தவன் பாரதி பண்டைய தமிழ்ப் பாரம்பரியங்களில் புரையோடிப் போயிருந்த பெண்ணடிமைத் தனங்களை களைய முற்பட்ட பாரதி சில விடயங்களைக் கவனிக்



கத்தவறியிருப்பதை பாரதிபாடல்களை ஆழமாக நோக்கும் எவரும் புரிந்து கொள்ளலாம். பெண்ணுக்கு காலங்காலமாக விதிக்கப் பட்டிருந்த கட்டுப்பாடுகளையும் இடப்பட்டிருந்த வேலிகளையும் தகர்த்தெறிந்து கற்புநிலையினை இருகட்சிக்கும் பொதுவில் வைக்கத்துணிந்த பாரதி, பெண்ணுக்கு இடப்பட்டிருந்த வேலிகளைக் களைந்தெறிந்தானாயினும். கண்களிரண்டிருந்தும் காணுந்திறமை யற்ற பெண்களின் கூட்டத்தினை விழிப்படையச் செய்தானாயினும் வேலிகளைக் களைந்தெறிந்தவன் புதுவேலிகளை அமைத்தானா என்பது விசனத்திற்குரிய வினா ! பழமையான, இறுக்கமான, கட்டுப்பாடுகளைத் தகர்த்தெறிந்தவன், புதிய கட்டுப்பாடுகளையும் விதித்திருக்க வேண்டும்.

பாரதியின் பாடல்களால் விழித்துக்கொண்ட பெண்மை, வீறுகொண்டு புறப்பட்டு, கூர்ப்படைந்து, பரிணாமம் பெற்று கட்டுப்பாடுகள் விதிக்கப்படாமையினால் விகாரப்பட்டு நிற்கின்றது! ஆக பெண்விடுதலை பேசியவன் பெண்விடுதலைக்கான எல்லைகளை அமைக்கவில்லை. இன்றைய பெண்களின் தான் தோன்றித்தனமான வளர்ச்சிகளுக்கு இதுவே காரணமாகவும் கூட இருக்கலாம். கட்டுப்பாடற்ற இத்தகைய பெண்விடுதலை வாதம் பெண்களை நீண்டகாலத்திற்கு பெண்களாகப் பேணவில்லை என்பதையும் அவதானிக்க முடிகிறது.

இன்னும் சாதிப்பிரிவினையைக் கடிந்தவன், காக்கை குருவியெங்கள் ஜாதியென்றவன், சில இடங்களில் தனக்குள்ளேயே விவாதம் நடத்தி முரண்படுகின்றான். விடுதலைப் பாடலிலே

"விடுதலை! விடுதலை ! விடுதலை !

பறையருக்கும் இங்குதீய புலையருக்கும் விடுதலை ! பரவரோடு குறவருக்கும் மறவருக்கும் விடுதலை! என்கின்றான். கூர்ந்து அவதானிக்கின்ற பொழுது பாரதி தனக்குள்ளேயே சாதியப்பிரிவுகளில் நம்பிக்கை காட்டியிருப்பது தெளிவாகிறது. விடுதலை கோரியவன் சகல மக்களுக்கும் விடுதலை எனக்கூறாமல் சாதியப் பிரிவுகளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்டுக் கூறியது மறைமுகமாக அவனும் சாதிப்பிரிவினைகளில் ஈடுபாடு காட்டியிருப்பானோ எனவும் எண்ணத் தோன்றுகிறது.

மேலும் " ஈனப் பறையர்களேனேனும் அவர் நம்முடன் வாழ்ந்திங்கிருப்பவர் அன்றோ, சீனத்தராய் விடுவாரோ பிற தேசத்தவர் போல் பல தீங்கிழைப்பாரோ" என்னும் கவிதையின் ஆரம்ப அட்சரங்களில் "ஈனபறையர்கள்" எனக் குறிப்பிடப் பட்டிருப்பதும் மறைமுகமாக சாதியப் பிரிவினைகள் பாரதி கவிதைகளில் இருந்திருக்கின்றது என்பதைப் புலப்படுத்துகின்றது. ஒன்றே குலமென்றும் ஒருவனே தேவனென்றும் குறிப்பிட்டுவிட்டு, ஈனப்பறையர்கள் என இழிவாக இனவாதம் பேசுவது திருவாசகம் படித்துவிட்டு சிவன்கோவிலை இடிப்பதற்கு ஒப்பானது !

இதைவிட, பாப்பாப்பாடல்களிலும் சில தவறுகள்! உளவியல் ரீதியான ஆய்வுகளினடிப்படையில் எப்போதும் சிறுவர்களுக்கு நேரடியாக அறிவுரைகளை கூறுவது தவறானதாகும். குழந்தைக்கு, அன்னை நெருப்பினைத் தொடாதே என நேரடியாகக் கூறும் போது நிச்சயமாக குழந்தை நெருப்பினைத் தீண்டிப்பார்க்க முற்படும் என்பது நாமறிந்த விடயம். இது இவ்வாறிருக்க பாரதி "பொய் சொல்லக்கூடாது பாப்பா" என்று நேரடியாகக் கூறும் அறிவுரை எதிரான விளைவுகளைத் தந்தாலும் வியப்படை வதற்கில்லை.

இனி பாரதியினை விடுத்து உலகம் முழுவதும் விரவிக் கிடக்கும் ஆறு கோடித் தமிழ் மக்களின் சுகங்களோடும், துக்கங்களோடும் தான் பங்கெடுப்பதாகப் பறைசாற்றிக் கொள்ளும் வைரமுத்துவிடம் நகர்கின்றேன்.

நன்னூலின் காண்டிகையுரையின் சொல்லதிகாரம் நுவல்வோன் களைய வேண்டிய ஐயிருகுற்றங்களையும் எடுத்துரைக்கிறது. குன்றக் கூறுவது, மிகைப்படக் கூறுவது, கூறியது கூறுவது, மாறுகொளக்கூறுவது, வழூஉச்சொற்புணர்த்துவது, மயங்க வைப்பது, வெற்றனத்தொடுப்பது, மற்றொன்று விரிப்பது, சென்று தேய்ந்திறுவது



நின்று பயனின்மை என்பவை ஐயிரு குற்றங்களாகும்.

இவ்வடிப்படையில் வைரமுத்துவினை நோக்குகின்ற பொழுது தனது பாடல் வரிகளில் பல விடங்களில் மிகைபடக்கூறுகின்றான். "அழகு" என்னும் அடைமொழிப்பதத்தை ஆண்பாலா ? பெண்பாலா? என்றொரு வினாத்தொடுத்து இறுதியில் பெண்பால் என்கின்றான். கற்பனைக்காக, அழகுக்காக எதுகை மோனைக்காக மிகைபடக் கூறி வழூஉச்சொற்புணர்த்தி வாசகர்களை மயங்க வைக்கின்றான். பிழையான ஒரு கருத்தினை, மக்கள் மத்தியில் காவிச்செல்லுகின்ற இக்கவிஞனை என்னவென்று நோவது ?

அத்தோடு கவிதைக்கு பொய்யழகு என்கின்றான் கவிதை வரியின் சுவை அர்த்தம் புரியும் வரை என்கின்றான். இவ்வா றெல்லாம் கூறுகின்ற ஒரு கற்பனைக்கவிஞனை எவ்வாறு இலக் கியத்தரமுடையவன் என ஏற்றுக்கொள்ளுவது !

" எதுகை மோனைக்காக பாட்டின் பொருளைத் திரித்துச் சொல்பவன் கலைமகளின் முகத்தினை கரித்துண்டால் மூடுகின்ற ான்" எனக்கொண்டு நோக்கின், வைரமுத்து சரஸ்வதியின் முகத்திலே கரிபூசினான் எனத்தானே பொருள் கிடைக்கிறது ! இது தவ றில்லையா ? இது பிழையென்று ஆகாதா ?

மேலும், வைரமுத்து பல விடயங்களில் கூறியது கூறு கின்றான். முன்பின் முரண்பட மாறுகொளக்கூறுகின்றான் தாம் கொண்ட காதல் மொழிவதற்கு தமிழ்நாட்டுப் பெண்கள் துணிவதில்லை எனக்கூறிய அதே கவிஞன் தான், தான் அறிந்ததும் தெரிந்ததும் , தெளிந்ததும் காதல் ஒன்றுதான் என ஒரு பெண் ணைக் கூறச்செய்து முரண்படுகின்றான்.

தமிழ்சினிமாவின் வியாபாரத்தேவைகள், ஒரு நல்ல கவிஞனையும், அவனின் கவித்திறனையும் எவ்வளவு தூரம் கொச்சைப்படுத்தும் என்பதற்கும் சோரம் போகச் செய்யும் என்பதற்கும் வைரமுத்துவின் பாடல்வரிகள் சிறந்த உதாரணம் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று நவம்பர் 23 இருள் சூழந்த அதிகாலை: காற்று வீசுவதாகத் தெரியவில்லை, ஆனால் நான் உணர்கிறேன். ஜன்னல் வழியாகப் பார்வையைச் செலுத்துகையில் வெள்ளவத்தையின் உயர்ந்த தொடர் மாடிகளில் ஆங்காங்குள்ள அறைகளில் வெளிச்சத்தைக் காணக்கூடியதாகவே இருந்தது. பரீட்சைக்காலம், மாணவர்கள் படிக்கக்கூடும்.

நிச்சயம் எழுதியாக வேண்டும் ஆனால் மனதில் பூதாகாரமாகக் குற்ற உணர்ச்சி அவனது சொந்த வாழ்க்கையல்லவா இது ? எழுதினால் ...... எழுதினால் .....

அது கிடக்கட்டும் ஆனால் அவாகள் மாறவேண்டும் மாறியே ஆகவேண்டும். ஒருவேளை மாறலாம். எனவே நிச்சயம் எழுதியாக வேண்டும். அவனிடம் அமைதியாக, பவ்வியமாக அனுமதி கேட்டேன் பற்கள் தெரிய அவனது வழமையான புன்னகை !நன்றி நண்பா நன்றி !




என் நண்பன் அனுமதி தந்துவிட்டான் அவனது வாழ்க்கையை இனி உங்கள் ஒவ்வொருவரோடும் பகிர்ந்து கொள்ளப் போகின்றேன்.

அவன் எனக்குப் பின்பு தான் அங்கு வேலைக்கு வந்தானாயினும் என்னைவிட சில வருடங்கள் வயதில் மூத்தவன். உடல்வாகு சரியாக என்னைப்போலவே இருந்தாலும் என்னை விடவும் கொஞ்சம் உயரம் குறைவாக இருந்தாலும் பார்ப்பவர்கள் இருவரையும் ஒரே வயதினர் என்றே சொல்வர்.

அவனுடனான முதல் சந்திப்பு எனக்கு நினைவில் இல்லை ஆனால் தொழில் நிமித்தமாக அவன் வேலை செய்யும் பகுதிக்கு அடிக்கடி செல்ல வேண்டி இருந்தது. அவனை ஆரம்பத்தில் நான்



பன்மையிலேயே அழைத்துவந்தேன் ஆங்காங்கு ஆங்கிலச் சொற்களால் வெட்டி ஒட்டப்பட்ட என் சிங்களத்தை முழுமையாக்கி விட்டு அவன் தன் பற்கள் தெரிய புன்னகைப்பான்.

அவன் புன்னகை தவிர அவனோடு என்னை அதிகளவில் ஒன்றிணைய வைத்தது எம்மினத்தின் உணர்வுகளுக்கு அவன் மதிப்பளித்ததும் அறவே சிங்களம் தெரியாத நண்பர்களுடன் கூட அவன் சகோதரத்துவம் பாராட்டியதும் தான் என்றால் அது நிதர்சனமான உண்மை !

அந்த நாள் எனக்கு நன்றாக நினைவில் உள்ளது. இன்றைக்கு சுமார் 8 மாதங்களிற்கு முன்பிருக்கும் தமிழில் வெளிவந்த ஒரு காதல் பாடலைப் பற்றி சம்பாஷனை ஆரம்பித்துப் பின் காதலுக்குத் தாவியது அவன் காதலைப் பற்றி நிறைய அறிந்து வைத்திருந்தான். காதலைப் பற்றி நிறையக் கூறினான் "காதலைப் பற்றி ஒரு பெண் உன்னிடம் என்ன கூறுகின்றாள் என்பதிலிருந்து அவள் உன்னைக் காதலிக்கின்றாளா ? இல்லையா என்பது தெரிந்துவிடும்" தன் வேலையைக் கவனித்தபடி கூறினான்.

" நீ காதலிக்கின்றாயா.. ? " முன்பிருந்த பன்மை ஒருமையாகி இப்போது பல நாட்களாகிவிட்டன எனது கேள்விக்கு அதே புன்னகை!

"ஏ ஓஹோ ..! அப்படியானால் அவள் ......?"

"அவளும் தான்! ஆனால் அவள் இப்போது உயர்தரப் பரீட்சைக்குக் படிக்கின்றாள்"

"2001ம் ஆண்டு பிரிவா ?"

"ம் ! அவளது அப்பா, அம்மா எப்போது என்னை அடித்து நொருக்கலாம் எனக் காத்திருக்கின்றனர்" சொல்லிவிட்டுச் சிரித்தான் நானும் சிரித்தேன் பிறிதொரு சந்தர்ப்பத்தில் "எப்படிக் காதலிக்க ஆரம்பித்தாய் ? " என்று கேட்டேன்.

" உண்மையில் எனக்கு அப்படி ஒரு எண்ணமே இருக்கவில்லை. மொரட்டுவையில் ஒரு திருமணவீட்டிற்கு பாண்ட் வாசிக்க நானும், நண்பர்களும், மைத்துனர் மாரும் சென்றிருந்தோம். அவளும் அங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திருந்தாள் நண்பர்கள் தான் முதன் முதலில் அவள் என்னையே எப்போதும் பார்த்தப்படி இருக்கின்றாள் என எனக்கு அடையாளப் படுத்தினர். பின்பு அன்று, நான் அவளைப் பார்க்கத் தொடங்கினேன். அவள் எமது வாசிப்புக்கள் முடிவுற்ற போது ஒரு தடவை புன்னகைத்தாள் நண்பர்கள் என்னைப் பாராட்டினர், ஆரவாரித்தனர். அன்று ஆரம்பித்தது தான் இன்று என் ஒவ்வொரு வெற்றிக்குக் காரணமும் அவள் தான் ! அவளது காதல் தரும் உந்துதல் என்னை வெல்ல வைக்கிறது"

"ம் .... நண்பர்கள் தான் அடித்தளமிட்டார்கள் ?"

"ம்!! நண்பர்களின் உதவியை நான் மறக்கவே மாட்டேன்! அவளது வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம், வகுப்புக்குச் செல்லும் இடங்கள் எல்லாமே நண்பர்களே தேடித் தந்தார்கள். எனக்காக அவளோடு சென்று கதைத்தனர். உயர்தரம் முதல் வருடத்தில் என்னிடம் காதலைத் தெரிவித்தாள் அப்போது நான் வேலை செய்ய ஆரம்பிக்கவில்லை. காதல் சொன்ன முதல் தினம் இருவரும் மொறட்டுவவிலிருந்து கொட்டாஞ்சேனை தேவாலயத்திற்குச் சென்றோம்"

" அப்படியானால் அ.. அவருக்குப் 17 வயது .....? கேட்டேன்.

"அதுவே அதிகம் இப்போதெல்லாம் மிக இளவயதில் ஆரம்பித்து விடுகின்றனரே ?"

நான் அவ்விடத்திலிருந்து மெதுவாக நகர்ந்தேன்.

இன்னொரு நாள் என்னை அழைத்து அவளின் புகைப்படத்தைக் காட்டினான்.

அவள் உண்மையில் நல்ல அழகி ! அவர்களது காதலைப் பொறுத்தவரையில் நண்பன் தான் அதிஷ்டசாலி புன்னகையோடு ஒரு சிவப்பு நிறக் காரின் மீது சிரித்தபடி நின்றிருந்தாள்.

" நீ அதிர்ஸ்டசாலி " அவனைப்பார்த்துப் புன்னகைத்தேன்

" ஆகஸ்ட் மாதம் ஆரம்பித்து விட்டது. அவளுக்குப் பரீட்சை முடிய இன்னும் சில தினங்களே உள்ளன" உற்சாகத்தோடு கூறினான்.

"ஜமாய்"



ஒரு மாதத்தின் பின் ஒரு நாள் அவனை மீண்டும் நிறுவனத்தில் சந்தித்தேன். நானாகச் சென்று கதைத்தேன்!

" என்ன அவளிற்குப் பரீட்சை முடிந்தால் எம்மோடு கதைக்க மாட்டீர்களோ?"

"அப்பிடியில்லை மச்சான்"

" அவனில் ஏதோ ஒரு மாற்றம் தெரிந்தது நிறைய யோசிப்பவன் போன்று களையிழந்து இருந்தான் ! மீண்டும் துருவிக்கேட்டேன் சொல்லத் தொடங்கினான்...

" அவளிடம் சென்று கதைத்தேன் அவளின் பெற்றோருக்குத் தெரியாமல் கதைக்க மிகச் சிரமப்பட்டேன். ஆனால் கதைத்தேன் அவள் என்னோடு தன் வாழ்க்கை பொருந்தாது என்கின்றாள்..."

என்ன சொல்கின்றாய் ? ஆ.. அப்படியென்றால் ..."

"தனது "அதஹஸ்" வேறு என்றும் எனது "அதஹஸ்" வேறு என்றும் கூறுகின்றான்"

"அதஹஸ்" என்ற அந்தச் சிங்களச் சொல்லுக்கு என்னால் சரியான அர்த்தத்தைக் கண்டு பிடிக்க முடியவில்லை! எனவே கேட்டேன்.

"அதஹஸ் என்றால் என்ன ? "

"அதாவது நாம் வாழ்க்கையை இனி எதிர்நோக்கிய பார்க்கின்ற முறை எமது எண்ணங்கள் இனி என்ன செய்ய .. அவ்வளவும் தான்!"

எனக்குள் கொஞ்சம் கோபமிருந்தது. அது என் பேச்சில் வெளிப்படவே செய்தது

"இவர்கள் இப்படித்தான்! கணக்கெடுக்காதே! நீ என்ன நினைக்கிறாய் ?"

"இல்லை மச்சான்! அவள் சொல்வதில் உண்மை நிறைய உள்ளது. அவள் தந்தையின் கனவின்படி அவள் வைத்தியராக விரும்புகின்றாள். அதற்குரிய திறமை அவளிடம் உள்ளது. என்னைப்பார் இங்கு பாடல்களோடு போராடிக் கொண்டிருக்கின்றேன்! அவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்வது சரி நான் ஏற்றுக்கொள்கிறேன் ஆனால் ஒரு பிரச்சனை"
என்ன பிரச்சனை ? "

" உன்னிடமும், என் அக்காவிடமும் இதைச் சொன்னதுபோல் வேறு நபர்களிடம் இதைச் சொல்ல முடியவில்லை குறிப்பாக நண்பர்கள் , மைத்துனர்கள் கேலி செய்வர் இவ்வளவு தூரம் சென்ற பிறகு இப்படிக் கோட்டை விட்டுவிட்டாயே என்பார்கள் "

"ஐயோ அவர்களை எல்லாம் ஒரு பொருட்டாய் எடுக்காதே ! நீதான் அவளை விரும்பாமல் விட்டதாய்ச் சொல்லிக் கொள் !"

" அதை எவரும் நம்பமாட்டார்கள் ! சரி பார்ப்போம் கொஞ்ச நாட்கள் நண்பர்களோடு சேராமல் ஒளித்துத் திரிய வேண்டியது தான்! "

அன்று இரவு வேலையில் அவனைப் பற்றியும், அவன் காதலைப்பற்றியும் நிறைய யோசித்தேன் ! அந்தப் பெண்ணில் பிழை உள்ளது தான் ! ஆனால் அவள் என்ன செய்வாள் அறியாத வயதில் ஒத்துக்கொண்டு விட்டு அறிவு வர பெற்றோரின் விருப்பப்படி கல்வியின் பால் நகர்ந்துள்ளாள் ! அது அவளது வாழ்க்கை ! விருப்பமில்லை என்பதை அறிவிக்க அனைவருக்கும் உரிமை உண்டு ! அதைப்போன்று விருப்பத்தையும் யாராலும் தடுக்க முடியாது தானே ? தாய் மண்ணை உயிருக்குயிராக விரும்புகின்றோம். தாய் மண் எம்மை விரும்புகின்றதா இல்லையா ? யாருக்குத் தெரியும் ? ஒருவேளை அது விரும்பாவிடினும் கூட எங்கள் தாய் மண் என்று நாம் அதை விரும்பியபடிதான் இருக்கின்றோம்.

நாட்கள் ஓடத்தொடங்கின சுமார் 2 மாதங்கள் கடந்திருக்கும் அவனைப்பற்றி நிறுவனத்தில் ஒரு பரவலான கதை உலாவத் தொடங்கியது அவனுக்கு மூளைக்காய்ச்சலாம்! நான் நம்பவேயில்லை. அவனைச் சந்தித்து கேட்கும் திராணியும் எனக்கில்லை அவனையும் அடிக்கடி காண முடியவில்லை.

பரீட்சை காரணமாக நான் சில நாட்கள் ஓய்வெடுக்க வேண்டியிருந்தது, அன்று இரவு நேரம் ! நாம் இருவரும் மட்டுமே வேறு யாருமில்லை!



" மச்சான் இவ்வளவு நாட்களாக எப்படியோ ஒழித்துத் திரிந்து விட்டேன். வரும் திங்கள் பாண்ட் குழு கூட்டம் உள்ளது. நண்பர்களையெல்லாம் சந்திக்கப் போகின்றேன். என்ன செய்வதென்று தெரியவில்லை ! தலையெல்லாம் வலிக்கிறது தலையிலும் எனக்கு ஏதோ வருத்தம் ...!"

மிகுந்த கவலையுடன் கூறினான்! எனக்கு இப்போது புரிந்துவிட்டது இவனது முழுப் பிரச்சனையும் இவனது காதல் தோல்வி பற்றிய நண்பர்களின் பழிப்பு வார்த்தைகள் பற்றியது தான்! மிகுதியெல்லாம் இவன் கற்பனை! அவன்மீது மிக்க அனுதாபப்பட்டேன் ! நிறைய அவனோடு பேச வேண்டும் என்று ஆசைப்பட்டேன் ஆனால் ஏனோ என்னால் ஓரிரு வார்த்தைகள் தான் கூறமுடிந்தது.

"நண்பர்கள் எது சொன்னாலும் காதில் வாங்கிக் கொள்ளாதே! மற்றவனை ஒன்றில் சிக்கவைத்து வேடிக்கை பார்ப்பது தான் இவர்களது பொழுதுபோக்கு....! இவர்கள் எல்லாம் உண்மையான நண்பர்களில்லை! அவர்களுக்கும், அவளுக்கும் வாழ்ந்து காட்ட வேண்டும். உன்னால் முடியும் ! கூட்டத்திற்குப் பயப்படாமல் போ !" அவன் தலையாட்டினான் இது நடந்தது திங்கட்கிழமை.

> "அவர்கள் மாறவேண்டும் மாறியே ஆகவேண்டும்.
> ஒருவேளை மாறலாம்.
> எனவே நிச்சயம் எழுதியாக வேண்டும் "

நவம்பர் 17 வெள்ளிக்கிழமை சக ஊழியரோடு அலுவலக வாகனத்தில் அலுவலகத்திலிருந்து வந்துகொண்டிருந்தேன். கதை எல்லா இடமும் சென்று அவனைப் பற்றி வந்தது நிறுவனத்தின் அப்பகுதியில் எனக்குமிகப் பிடித்தவன் அவன் தான் என்றேன்! அவரும் ஆமோதித்தார்.

"நன்றாக எல்லாரோடும் பழகுவான்! இனி எப்போது எடுக்கப் போகின்றார்களோ தெரியாது!"

என்னை யாரோ ஓங்கி அடித்தனர் ! திடுக்கிட்டேன்!

" என்ன கூறுகின்றீர்கள் அ.. அவனுக்கு எ... என்ன ? "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதைத்தானே அப்போதிருந்து கூறுகின்றேன். இன்று அதிகாலை வெள்ளவத்தை புகையிரத தண்டவாளத்தில் விழுந்து தற்கொலை செய்தான் என்பது எனக்குத் தெரியும்!

"அ... அவனோ ?

"ம் .... பாவம் மூளைக்காய்ச்சல் வலி தாங்க முடியாது தன்னைத்தானே மாய்த்துவிட்டான் " அவர் இரங்கினார்.

மூளைக்காய்ச்சல் கிருமிகளல்ல.. வேறு விஷக்கிருமிகளால் தான் அவன் தற்கொலை செய்தான் என்பது எனக்குத் தெரியும் ! ஆனால் நான் அதை வெளியில் கூறி வாதிடவில்லை.

அவனது இறுதி ஊர்வலத்தில் அவனது தாய் அந்தப் பெண்ணை திட்டு திட்டென்று திட்டி கதறினாள் மூளைக்காய்ச்சலைத் திட்ட வில்லை இனி அப்பெண்ணின் நிலை...? அவனது காதல்கதைக்கு அடித்தளமிட்டவர்கள் அவர்கள் அங்கே இருந்தனர்.

அவனை எம்மால் இப்போது பார்க்கவே முடியாது அவனது வார்த்தைகள் என் காதில் கேட்டன!

"அவனை எனக்குக் காட்டியவர்களே நண்பர்கள் தான் !"

"நண்பர்கள் எவ்வளவோ உதவி செய்துள்ளனர்"

"எனக்குக் காதல் தோல்வி என்று தெரிந்தால் நண்பர்கள் பழிப்பார்கள்"

நான் எனக்குள் அழுதேன். மனம் அவனுக்காகக் குமுறியது வீடு வந்து கொண்டிருந்தேன். தனியார் வகுப்பு நிறுவனங்கள் உள்ள வீதி அது! ஒரு பெண் நிறுவனத்தில் நுழைகின்றாள் அதற்காகக் காத்திருந்தது போல மாணவர் கும்பல் யாரோ ஒரு மாணவனின் பெயரைச் சொல்லிக் கத்துகிறது! ஏதோ அந்த மாணவனுக்கு உதவுகின்றோம் என்ற நினைப்பு...! அந்த மாணவனுக்கும் சரி அந்தப் பெண்ணுக்கும் சரி எவ்வளவு பிரச்சனைகளை ஏற்படுத்துகின்றனர்.

இதை வாசித்த நீங்கள் ஆணாயிருந்தாலும் சரி, பெண்ணாயிருந் தாலும் சரி மேற்சொன்ன அந்த அவர்களில் நீங்களும் ஒருவர்



என்றால் வேண்டாம்.. பிறரது விடயங்கள் எமக்கு வேண்டாம். தயவுசெய்து விட்டுவிடுங்க.... இனியாவது மாறுங்கள் என்று வெள்ளவத்தை புகையிரத தண்டவாளத்தில் உயிர்நீத்த என் நண்பன் சார்பாக வேண்டுகின்றேன்!

எனக்கு ஆத்மா சாந்தியில் எல்லாம் நம்பிக்கை இல்லாவிடினும் நவம்பர் 17 உயிர்நீத்த என் நண்பன் நுவான் டீ அல்மேதாவிற்கு அது உண்டு! அவனது ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்தியுங்கள். பிறரது காதல் வாழ்வை உருவாக்கும் நெறிப்படுத்தும், அழிக்கும் இயக்குனர்கள் நீங்கள் மாறாதீர்கள் ..!

வேண்டுகின்றேன் என்று கதையை நிறைவு செய்தேன். வேலையில் மனம் செல்லவில்லை விடியக் கொஞ்ச நேரமே இருந்தது. தூக்கம் கண்ணைச் சூழ்ற்ற மயக்கம் போன்ற ஒரு அரைத் தூக்க நிலை! சுவரருகே அ... அவன்! திடுக்கிட்டேன். விழித்தேன். குளிரிலும் வியர்க்க ஆரம்பித்தது. இங்கெல்லாம் அவனோடு அளவளாவியுள்ளேன். ஏதோ ஒரு பயம்! ஆனால் சில கணம் தான்! மீண்டும் அரைத் தூக்கம் அவன் அருகில் வந்து அமர்கிறான். அதே பழைய புன்னகை! மனநிம்மதியோடு கண்விழித்தேன்! எதிரே கதையைப் பார்த்தேன்! மனம் முழுவதும் அமைதி !

---



இவ்விதழில் இடம்பெற்ற செவ்விக்களம் பகுதியில் ஆர்.சிவகுருநாதன் அவர்கள் குறிப்பிட்ட. தினபதி பத்திரிகையாளர் அருளானந்தன் ஐயா அவர்களை கடும் சிரமத்தின் மத்தியில் கொழும்பு நகரில் சந்தித்தோம். இலங்கையில் பத்திரிகையாளர்களின் எதிர்காலம், உத்தரவாத மற்ற நிலையில் இருக்கிறது. நீங்கள் என்ன கருதுகின்றீர்கள் என வினவிய போது.....

இலங்கையில் மட்டுமல்ல உலகம் முழுவதிலுமுள்ள பத்திரிகையாளர்களின் நிலை இதுதான் என்றவர், நம்முடைய அடுத்த கேள்விகளுக்கு பதிலளிக்காது மௌனமானார்.

இப்புகைப்படம் நீண்ட நேர வற்புறுத்தலின் பின்பும் அவர் அனுமதியளிக்காத காரணத்தினால் அவரது அனுமதி இன்றியே எடுக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் என்று இன்று!

செல்வராஜா பிரவீன்சங்கர்

அரிதாரம் பூசாது
அட்டகாசம் செய்யாது
தலைகுனிந்து வகுப்பு வந்து
அடக்கம் என்று பெயரெடுத்து

பொருளாதாரம் காப்பது போல்
சிக்கனமாய் புன்னகைத்து
கல் நெஞ்சை கசிய வைத்து
எளிமையின் அழகி,
இவளென்று புலம்பவைத்து



காதல் கடிதம் ஏற்காது
நேராக மறுக்காது
மழுப்பியே காலந்தள்ளி
விண்ணப்பங்கள் சேரும் வரை
தேர்வினை ஒத்தி வைத்து

இறுதிவரை காத்திருந்து
வீட்டில், திருமண பேச்சுவர
தெரிவுகளில் சிறந்ததை
லாவகமாக தேர்ந்தெடுத்தும்
தெரிவுகள் தரமில்லையெனில்

காதலெல்லாம் பொய்யென்று
அற்புதமாய் கபடமாடி
அப்பா சேர்த்த
சொத்தையெல்லாம்
சீதனமாய் அள்ளிக்கொண்டு

பொருளாதாரத்தின் உச்சத்தை
அறிவின் ஆழத்தை
புரிந்துணர்வின் விகாரத்தை
இரசனையின் சூனியத்தை
மணம்முடிக்க சம்மதிக்கும்

இவர்கள் தம்மை,
பெண்கள் என்பர்!

"விதி விலக்குகளுக்கு என்
சிரந்தாழ்ந்த வணக்கங்கள் "



# இனியொரு விதி

தே. யோகேந்திரன்

"சிறுமை கண்டு பொங்கும் சிந்தை தான்
இளமையின் கம்பீரமான அடையாளம் "

யதார்த்தத்தைத் தொலைத்துவிட்டு கற்பனையின் கரங்களில் எதிர்காலத்தை ஒப்புவித்துவிட்ட இன்றைய இளைஞர்களுக்காக இளைஞர்களில் ஒருவனாக சில சிந்தனைகளுடன் .....

நாளையின் நம்பிக்கைகள் நாம்தானென்று, நம்மில் நம்பிக்கை வைத்துக் காத்திருக்கும் நம்மவர்களின் முகத்தில் கரியைப் பூசிவிட்டு நாளையைப் பற்றி நாமே நம்பிக்கையின்றி அலைந்து கொண்டிருக்கின்றோம். எதிர்காலத்தை ஒளியேற்ற சிகரெட் நெருப்பையும், வாழ்க்கைச் சக்கரத்தை ஓட்டிச் செல்வதற்கு சில்லறைச் சிற்றின்பங்களையும் துணையாக கொண்டு இருண்ட உலகத்துக்குள் படிப்படியாக நம்மை அறியாமலேயே காலூன்றிக் கொண்டிருக்கின்றோம்.

## கண்டிப்பாக இளைஞர்களுக்கு மட்டும்

இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னரேயே "வாழ்க்கையைச் சீரழித்துக் கொண்டிருக்கும் இளைஞர் சமுதாயத்துக்கு யார் நல்ல புத்தி சொல்வது ?" என்று வருத்தத்தோடு வினவிச் சென்ற கிரேக்க தத்துவமேதை பிளேட்டோவுக்கு இன்று வரை ஒருவருமே பதிலளிக்க முன்வராதது மிகுந்த வேதனையைச் தருகிறது !

எங்கே போகிறோம் என்று தெரியாமல் அலைகளின் முதுகில் சவாரி செய்யும் குமிழிகள் போல் குறிக்கோள் இல்லாமல் அல்லாடிக் கொண்டிருக்கிறது இன்றைய இளைஞர்களின் வாழ்க்கை. குடும்ப அங்கத்தினருடனான உறவு சரியில்லை. சமுதாய உறவுகளில் அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு சுகமில்லை. எதிர்காலத்தை நிர்ணயிக்கும் கல்வி அவர்களுக்கு கசப்பாக இருக்கிறது. நாளைய தலைவர்களை இன்றைய தலைமுறை சுரண்டிக் கொண்டிருக்கிறது.

ஆட்டுவித்தால் ஆடும் பொம்மைகளாய், சாவி கொடுத்தால் சுற்றும் சக்கரங்களாய், அந்திகளைக் கண்டு அஞ்சுபவர்களாய், எதிர்காலத்தைப் பற்றி எதுவித சிந்தனையும் அற்றவர்களாய் மாறிக் கொண்டிருக்கிறது இந்த இளைஞர் சமுதாயம் ! வாழ்க்கையை ரசிக்க வேண்டிய ஒவ்வொருவரது முகத்திலும் ஒருவித அதீத சோகம் அப்பிக் கிடக்கிறது. இவற்றையெல்லாம் மறப்பதற்கு கற்பனை வடிகால் களை நாடிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் .....

இளைஞர்களே !

என்று உங்களுக்கு விமோசனம் ?

யாரிடமிருந்து உங்களுக்கு விமோசனம் ?

யார் பெற்றுத் தருவார்கள் உங்களுக்கு விமோசனம் ?

எம் தோள்களில் இருக்கும் தினவும் கண்களில் இருக்கும் கனவும் ஒரு பிரபஞ்சத்தையே உருவாக்க வல்லவை. ஆனால் முறையான வழிகாட்டலும், சரியான சிந்தனையும் இன்றி அவையெல்லாம் விரய மாகிக் கொண்டிருக்கின்றன.

போதும் !

இதுவரை எமக்கெதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள், எம்மைப் பற்றி வந்த விமர்சனங்கள் எல்லாவற்றையும் மறந்து மீண்டும் புதிதாகப் பிறப்போம். இனியாவது உலக சமுதாயத்தில் ஒரு சிறந்த மாற்றத்தை உருவாக்குவதில் உறுதி கொள்வோம்.

புதியவர்களாய் புதுமைகள் படைப்பவர்களாய் பரிணமிக்க வேண்டுமெனில், எமது சிந்தனைகளையும் செயல்களையும் ஒருகுறிக் கோளுடன் மேற்கொள்ள வேண்டும். அதன் துணையுடன் எமது இலட்சியத்தை அடைவதே நோக்கமாக இருக்க வேண்டும். ஏனெனில் இலட்சியமற்ற வாழ்க்கை இலக்கு இல்லாமல் எய்யப்பட்ட அம்பைப் போல் பயனற்றதாகிவிடும். ஆகவே இலட்சியமொன்றை உருவாக்கி



அதை அடைவதே நோக்கமாக செயற்பட்டால் ஏனையவை அனைத்தும் நம்மை அறியாமலே அதற்கு வலிமை சேர்த்து நம்மைச் சேரும்.

வாழ்க்கையில் பரிணமிக்க வேண்டுமென்றால் கல்வியில் நன்கு பிரகாசிக்க வேண்டும். ஆனால் நமது நரம்பில் நார் உரிக்கும் கல்வித்திட்டத்தில் கடுகளவிலேனும் இஷ்டமில்லாவிட்டாலும் அதில் ஜெயிக்க வேண்டுமென்பதுதான் கசப்பான உண்மை. தேர்வு என்பது எவ்வளவு நிறையப் படித்திருக்கின்றோம் என்பதல்ல, எவ்வளவு விரைவில் பதிவு செய்கின்றோம் என்பதுதான்! ஒரேயொரு புள்ளி வேறுபாடு சமுதாயத்தில் ஒருவனுக்குள்ள அந்தஸ்தையே மாற்றி அமைத்து விடுகிறது. இதுதான் யதார்த்தம் இதற்காக அரசையும் கல்வித்திட்டத்தையும் குறைகூறுவதை விடுத்து நாமாக மாறிக் கொள்வோம். இல்லையென்றால் போட்டி நிறைந்த இவ் உலகிலே எமது முகவரியை தொலைத்துவிட்டு மீண்டும் அதனைத் தேடுவதிலேயே வாழ்க்கையை அஸ்தமித்துக் கொள்வோம்.

சிறுமை கண்டு பொங்கும் சிந்தைதான் இளமையின் கம்பீரமான அடையாளம். ஆனால் இன்றோ பழகிப் போன சிறுமைகளைக் கண்டு விலகிப்போகும் மனோபாவம்தான் அதிகமாக வளர்ந்திருக்கிறது.

புலிகள் பதுங்கலாம் ஆனால் ஒதுங்கக்கூடாது.

சின்னச்சின்ன அநீதிகள், அசிங்கமான அத்துமீறல்கள், கண்ணைக் கசக்கும் காட்சிகள் என்பன கண்களைச் சுற்றி நடக்கும் போது அதை எப்போதும் தட்டிக் கேடபவர்களாய் நாம் இருக்க வேண்டும்.

இதைத்தான்

"பாதகம் செய்பவரைக் கண்டால் பயம் கொள்ளலாகாது;

மோதி மிதித்துவிடு அவர் முகத்தில் உமிழ்ந்துவிடு" என்று பாரதியும் சொன்னான். அதைவிடுத்து அற்ப விஷயங்களுக்காக மட்டும் கும்பல் சேர்த்து அன்றாடம் அடிதடியில் ஈடுபடும் கலாசாரத்தை இன்றுடன் களைந்தெறிய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாக இளைஞர்களே!

எம்மை நம்பியிருப்பவர்களை நாம் என்றும் கைதூக்கிவிட வேண்டும். அதற்கு நாம் நம்மில் தன்னம்பிக்கை வைத்து செயற்பட வேண்டும். இலக்கை நோக்கிப் பயணிக்கையில் நாம் வெல்ல வேண்டியவர்களையும் நம்மை வெல்லக் காத்திருப்பவர்களையும் பற்றி எப்பொழுதும் விழிப்புடனேயே இருக்க வேண்டும். அன்றேல் மீண்டும் இந்த உலகம் எமக்கெதிராக விரல் நீட்டிக் குற்றம் சுமத்தும்.

ஒவ்வொரு இரவின் பின்னும் விடியல் தன்னை புதுப்பித்துக் கொள்கிறது. இது அன்றாட செயல்தான் ஆனால் இயற்கை என்றுமே சளைத்ததில்லை. சளைப்பதுமில்லை ! அதேபோல் நாமும் தன்னம்பிக்கையுடனும், விடாமுயற்சியுடனும் சளைக்காது உழைத்து எமது இலட்சியத்தை அடைந்து வாழ்வை வெற்றி கொள்வோமாக ! இனியும் எவரும் எம்மீது குற்றம் சுமத்தாது இருப்பது எம் கைகளிலேயே உள்ளது. நாளைய தலைமுறை வளமான சூழலில் நலமான நட்சத்திரங்களாக உருவாக இன்றிலிருந்தே பாடுபாடுவோம்.

கொழும்பு பம்பலப்பிட்டி
சரஸ்வதி மண்டபத்தில்
தமிழாலயம் வழங்கும்
கலைச்சாரல்
மார்ச் 17, 2002



# இளைய விவாதிகளே!

## தமிழாலயம் வழங்கும் புதிய தொடர்

சொற்களம் சுவைக்களம், சொல்லாடற்களம் சுவையூறுதளம் என்பர். தமிழ் மரபிலே விவதாக்கலையானது, பாரம்பரியமாக , வழி வழியாக காவப்பட்டு, காக்கப்பட்டு வந்திருக்கின்றது. நம் முன்னோர் கருத்தினைக் கருத்தினால் வெட்டிப்பேசினார்கள்.அனல்வாதம், புனல்வாதம் என்றெல்லாம் புராணங்கள் விவாதக்கலையின் தனித்துவத்தினை, உணர்த்துகின்றன. நெற்றிக்கண்ணைத் திறக்கினும் குற்றம் குற்றமே எனக்குறிப்பிடும் நக்கீரர்களின் வழிவந்தவர்கள் நாங்கள் ! எனவே இவ்விவாதக்கலை தொடர்ந்தும் செவ்வனே பேணப்படல் வேண்டும்.

“வேட்ப மொழிக” என்கிறது, தொல்காப்பியம். தெளிவான கருத்துக்களை நேர்த்தியாக விவாதிட வேண்டும் என்கின்றது. எனவே இத்துணை சிறப்பு வாய்ந்த விவாதக்கலையினை வளர்ந்துவரும் இளம் விவாதிகளுக்கு குறிப்பாக பாடசாலை மட்ட விவாதிகளுக்கு அறிவுறுத்த வேண்டும் என்னும் நல்லெண்ணத்துடன் தமிழாலயம் உயிர்ப்பு இதழின் மூலம் விவாதிகளுக்காக இத்தொடரினைப் பிரசுரிக்கிறது.

**திறமிகு சொல்லாடுக ! பொலிவுற்றுத் தமிழோங்குக !**

வாசிப்புக்கலாசாரத்திற்கும் விவாதத்திற்கும் எப்போதும் நேரான தொடர்பிருக்கின்றது. சிறந்த விவாதி நிச்சயமாக சிறந்த வாசகனாகவும் இருத்தல் வேண்டும். அறிவுதரக்கூடிய, நடைமுறையுடன் இணைந்து செல்கின்ற சிற்நத நூல்களை வாசித்தல் வேண்டும். அளவையியல் நூல்களையும் நியாய நூல்களையும் கற்க வேண்டும் அப்போது தான் தர்க்கம் ஆழமாய், காத்திரமாய் அமையும் இலக்கியங்களில் தொடர்ந்து ஆழமான பயிற்சியிருத்தல் வேண்டும். “ பட்டிமண்டபம் பாங்கறிந்து ஏறுமின்” என்னும் மணிமேகலைப் பாடலையும் மனதிற்கொள்ளல் வேண்டும். பயிற்சியில்லாமல் வாதிடுவது “அரங்கின்றி வாதிடுவதற்கு ஒப்பானது” என்கிறது வள்ளுவம் !

(வளரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From :

# Rexel Trading Company (Private) Ltd.

Agents & Transporters
Industrial Switchgears &
Power distribution products

Sales:
116A Messenger Street
Colombo - 12

Tel. : 01 - 440392
437582
473186 - 8

Fax - + 941436381
email : rexel@ sri.lanka. net

# கருத்தினை கவியாக்கி



இந்த ஒளிப்படத்திற்கு உங்கள் உணர்வுகளால்
உயிர்ப்பூட்டி எங்களுக்கு அனுப்பவும்
பத்து வரிக் கவிதைகளையே
உயிர்ப்பு வரவேற்கிறது.

முகவரி
கருத்தினை கவியாக்கி
உயிர்ப்பு
இல.31, காசல் ஒழுங்கை,
கொழும்பு - 04.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீண்டலால் .......!

அராஜகத்தின் நகர்வுகள்
அரங்கேறும் மண்ணில்
புதைந்த விதைகளின்
புலர்விற்காய் ........!
அலைகளின் ஆர்ப்பரிப்பும்
ஆதவனின் அரவணைப்பும்
சங்கமித்து சஞ்சரிக்க ......!
உரிமைகளின் எழுச்சியாய்
ஊற்றெடுக்கும் அருவியாய்
வான்திரை கிழித்து
விடிகிறது விடியல் .....!
பெண்ணிவளின்
எண்விரல் தீண்டலால்.....!

-ஸ்ருதி-



## விடியுமோ ???

இடிவிழுந்ததாய் - பெரும்
வெடி பிளந்ததாய் - நிலம்
வடிவிழந்ததோ - எங்கள்
வாழ்வழிந்ததோ ?

முடிவிழந்ததாய் - சுய
அடி தொலைந்ததாய் - இனி
திரை கிழித்துத் தான் - எம்
விடிவெழும்புமோ ?

ஷாரகன்

## செய்ய வல்லமோ ?

முகில்களின் திரை விலக்கி
வெய்யோன் தன் கதிர் பரப்ப
மறுவுலகம் விடிவு கொள்ள
கடலலைகள் இசை பாட

பெண் உள்ளம் வீறு கொண்டு
அராஜகத்தின் திரை கிழித்து
பாலைக்கு நீரூற்ற - அதில்
படகோட்டக் காத்திருப்போ ?

திக்கெல்லாம் பரவிட்ட
திக்கற்ற தமிழனின்
நிலையறியாத் தடுமாற்றம்
தனிப் படகின் சுட்டலோ ?

பட்ட மரம் பாலூற
பாலை நிலம் செழிப்புறவே
தத்தளிக்கும் படகு அது- தன்
தரையைத் தட்டிடுமோ ?

துவிச்சக்கர வண்டியதில்
துணையின்றிப் போறவனே
வனாந்தரமாச்சு நம்மண்ணென்று
வருந்தி நீ அழலாமோ ?

மறுவுலகம் போவேனும்
மாற்றானை வென்று நாம்
தமிழ்ப்பாலை அள்ளி வந்து - நம்
தாய் மண்ணில் ஊற்றோமோ ?

தர்ஷினி விஸ்வலிங்கம்






சென்ற இதழின்
ஒளிப்படத்திற்கான
உங்கள் உள்ளத்து
உணர்வுகள்

## திரை

வெள்ளைத் திரை மறைக்கும்,
திரைபொங்கும் உள்ளக்கடலை
அலையும் அமைதியும்
உள்ள க்கடலை

மெல்லப் பிரித்தேனும் பாசமாய்
கிள்ளிக் கிழித்தேனும் கோபமாய்
சொல்லத் துடிக்கும் உணர்வுகள்,
சுலபமாய் திரை விலக்கும்

மூழ்குவோம் எனத்தெரிந்தும்
அடிமனப் பள்ளத்தில்
செல்லமாய் சுழலும்
சக்கரக் கனவுகள்

வெள்ளமாய் நீர்வரும்
வளம் வரும் என்றெண்ணி
வள்ளமாய் ஓரத்தில்
கரைதேடும் நம்பிக்கை !

கிருஷி

உங்கள் கருத்துக்கள்
எங்களை வளப்படுத்தும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேகமங்கை பூமிநங்கைக்காய்

வெடித்த நிலம்பார்த்து துடித்த மேகமங்கை
கிழித்துவிட்டாள் தன்னுடலை - இன்னும்
விழிக்கவில்லை மானிடர்கள்
மனிதம் அற்ற மனிதர் - இவர்
மனங்களில் ஈரம் இல்லை.
எருதில் மழை பெய்தது போல் ஈருருளி
கொண்டொருவன். நீர்கண்டு விளையாட
நிற்கின்றான் இன்னொருவன்
மனம்நொந்து மங்கையவள் வடித்த கண்ணீரது - ஈரமற்ற
மனிதர்க்கன்றி தன்இன நங்கைக்காய் .........

ஜீவனா திருநாவுக்கரசு

## தாகம் !

தன்மானம் குன்றாத் தமிழனின் தாகம் தணித்திடும்.
இயற்கையின் முயற்சியோ ? பொங்குதமிழ் எழுச்சியோ ?
உலகத் தமிழ்ப்புரட்சியோ ? இது போதுமோ ?
தமிழ்த் தாகம் தீர்த்திடுமோ ?
சூரிய உதயத்தின் உற்சாக உணர்வு !
பொங்கிக்கிளம்புகிற கங்கையின் சீற்றம் !
சடுதியான மாற்றங்கள் !
இவை பருவகால மாற்றமோ ? அல்லது
தமிழ்நங்கை பருவமேந்திய தோற்றமோ ?

ப்ரியன்

## நினைவுகளால் வருடப்படும் வதைபடலம் தொடர்ந்தால் ...........

ரசித்தவையோ ரத்தினமாய் நினைவில் தவழ
ருசித்தவையும் கசத்த நனவில் - நினைவுகள் வருடும்
வதைபடலம் தொடர்ந்ததால் வனிதையிவள் விரல்கள்
வீறுகொண்டு கிழித்தெறிந்தது - திரையைமட்டுமல்லவே !
கீறலாய் காய்ந்திருந்த காயத்தையுமல்லவா
கீறிக்கிளறிவிட்டன அவள் விரல்கள் .......
ரணவதைகளால் சிதைபட்டவை புதையாது
ராட்சத உருவெடுத்து கண்முன் ரத்தம் சிந்தி நிற்க
ரட்சிக்க இயலவில்லை இயற்கையிடம் எதையுமே ......
ஆதவன் அந்திவானில் அஸ்தமிப்பதும் ஏனோ ?
ஆவேசம் கொண்ட அலைகடல் பொங்குவதும் ஏனோ ?
அர்த்தம் தருவேன் சிதையா இதயம் என்னிடம் இருந்தால் .....

பிரியசகி



நடுநிசி தாண்டிய நிசப்தத்தின் அமைதி துல்லியமாய்க் குலைந்தது போலிருந்தது.

"சரக் சரக்....... சரக் சரக்.."

'மரக்கிளைகளிலா அல்லது மணல் மூடைகளின் முன்னேயோ?' சரியாய் தீர்மானிக்க முடியவில்லை. காற்பெருவிரலில் ஊன்றி கைகளில் தாங்கியிருந்ததை 'சடாரெனத்' தூக்கி தோள்களில் பொருத்தி கண்களை இருட்டுக்குள் வீசினான்.

"சரக்.... சரக்.." தூரத்தே மரங்கள் அசைவது தெரிந்தது.

'குரங்குகளாக இருக்கக்கூடும் ..... ஒருவேளை பாம்புகளாயும் இருக்கலாம்' சின்னதாய் ஒரு நடுக்கம் உடலோடு ஒட்டிக் கொள்வதை உணர்ந்து கொள்ள முடிந்தது. நேற்றும் கூட இது பற்றி அவன் பேசியிருந்தான்.

"அண்ணை... எனக்குச் சின்னனில இருந்தே பாம்பெண்டா சரியான பயமண்ணை..."

அவரிடமிருந்து மிகப்பெரிதான சிரிப்பொன்று வெளிவந்தது.

""பரவாயில்லை.. உனக்கு பாம்புக்குத்தான் பயம்... இங்கை பேய், பிசாசுகளுக்குப் பயப்பிடுறவங்களுக்கும் இருக்கிறாங்கள்." கொஞ்சம் பொறு.. வாறன்.." எழுந்து சென்றவர் அதை எடுத்து வந்து கொடுக்க கைகளில் வாங்கிக் கொண்டான். "மினுமினுத்தது"




"இந்தா இதை வைச்சுக் கொள்.. தேவைப்படேக்கை மட்டும் தலையிலிருந்து கிட்டத்தட்ட ஒரு சாண் கீழே ஒரே போடாப்போடு.. முடிஞ்சிடும்.."

"கொல்லச் சொல்லுறியளோ ? " அவசரமாய் இடைமறித்துக் கேட்டான். மாறனை நோக்கினான். அவன் விழிகள் லேசாய் மூடியிருப்பது தெரிந்தது.

'பொடியன் நித்திரை கொள்ளுறான் போல கிடக்கு'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறன் இவனோடு இணைந்து கிட்டத்தட்ட ஒருவாரம்தான் ஆகியிருக்கும். ஒன்றிரண்டு வயது இளையவனாயிருப்பான் போலிருக்கும்.

"அண்ணை என்ரை நேரம் வந்த உடன் சொல்லுங்கோ.." என்று உட்காருபவனை சில சமயங்களில் தூக்கத்திலிருந்து எழுப்பிவிட வேண்டியிருக்கும்.

சென்ற வாரம் வரை இவனோடு இணைந்திருந்த நிலவன் இப்போது இல்லை. சூரியன் இரத்தம் சிந்திக்கொண்டிருந்த ஒரு பொழுதில் உருமறைப்புப் பணிகளில் மும்முரமாய் ஈடுபட்டிருந்தவனின் காதினை பக்கவாட்டாய்த் துளைத்து நெற்றியை சிதறச் செய்த சில அலுமினியச் சிதறல்கள் அவனைக் குப்புற வீழ்த்தி நிலத்தை முத்தமிடச் செய்திருந்தன.

இறுதி வரை ஓரிரண்டு மண் துகள்கள் அவன் உதட்டோரம் பிரியமறுத்து உட்கார்ந்திருந்தமை ஞாபகத்தில் வந்து போனது.

"சின்னனில எனக்கு மண் சாப்பிர்றதெண்டாச் சரியான விருப்பம் ஒவ்வொரு நாளும் அம்மாட்டை அடி வாங்கிறது அதுக்குத்தான்." எப்போதாவது நிலவன் வீட்டைப் பற்றிப் பேசினால் கண்டிப்பாய் சொல்வான். " இப்பவும் நீ மண்ணால தானே பல்லுத் தீட்டிறனி..." அவனைச் சீண்டுவதில் அலாதிப்பிரியம் இவனுக்கு ..

"அவசரத்துக்கு என்ன செய்யிறது ? அதுக்காக உன்னை மாதிரிப்பல்லுத் தீட்டாமல் இருக்க முடியுமே ?"

"நான் பல்லுத் தீட்டேல்லை எண்டு நீ எப்ப பார்த்தனி..? " சற்றுச் சூடாய் வார்த்தைகள் இவனிடமிருந்து வெளிப்படும்.

"எதுக்குப் பாக்க வேணும் ?.. உன்னோட கதைக்கேக்கையே விளங்குதே..." நிலவன் சிரிப்பினூடே சொல்வான்.

"சரி... அப்ப கதைக்காதை.." என இவன் எழுந்து போக அவர்களது பேச்சு வார்த்தைகள் இரண்டு மூன்று மணி நேரத்திற்கு முறித்துக் கொள்ளப்படும்.

மீண்டும் எப்போது இணைந்தார்கள் எப்படி இணைந்தார்கள் என்று யாருக்கும் தெரியாத அளவிற்கு கைகோர்த்து திரிவார்கள்.

"உங்கடை பிரச்சனைக்கை இனி தலையிடவே மாட்டம்" அவனுக்காதரவாயும் இவனுக்காதரவாயும் குரல் கொடுத்தவர்கள் இறுதியில் இப்படித்தான் சொல்வார்கள்.



மாறன் எழுந்து கொள்வது தெரிந்தது. கண்களை அழுத்தித் துடைத்து விட்டுக்கொண்டவன் தன் கைக்கடிகார விளக்கை அழுத்தினான். வெளிர் பச்சை நிறம் அங்கிருந்து ஒளிர்ந்தது.

"மாறன்"

"ம்..."

"இங்கை பரவாயில்லை... ஆனா வெளியான இடங்களில் இப்பிடி நேரம் பாக்காதயென்ன... உன்னையோ உன்ரை கையையோ சிதறடிக்கிறதுக்கு இந்த வெளிச்சம் போதும்..." மெதுவாகச் சொன்னான்.

"சரியண்ணை..." என்றவன் அருகே மணல் மூடையில் சரித்து வைக்கப்பட்டிருந்ததை கையினில் ஏந்தியவாறே எழுந்தான்.

"நீங்க இருங்கோ அண்ணை.. நான் பாக்கிறன்..."

"ம்... வேண்டாம் இண்டைக்கு முழுக்க நானே பாக்கிறேன்... நீ இரு.." கைகளை அசைத்து அவனை இருக்கச் சொன்னான்.

"இல்லையண்ணை...ரெண்டு மணியாச்சு.. இனி என்ரை நேரம் .. நீங்க இருங்கோ..."

அவன் முகம் இறுகியது. "ஆனா ஒண்டு நான் வாறனோ இல்லையோ நாங்கள் கட்டாயம் வருவோம்..." அம்மாவுக்குப் புரியவில்லை போலிருந்தது.

"இல்லையடாப்பா.. நான் நாளைக்கு வீட்டுக்குப் போறன்.. ரெண்டு நாளைக்கு அங்கைதான் நிப்பன்.. நீ இண்டைக்கு இரு..நானே..." தொடர்ந்தவனை "அம்மாட்டைப் போறியளோ" என்ற கேள்வியோடு இடைமறித்தான் மாறன். அவன் விழிகளில் சின்னதாய் ஒரு சோகம் மின்னியதாய்த் தெரிந்தது.

"வேண்டாமண்ணை... பிறகு பழக்கத்தில வந்திடும்.. நீங்க இருங்கோ.. இல்லையெண்டால் நில்லுங்கோ..."

தூரத்தே யானைகள் பிளிறும் சத்தம் மெலிதாய்க் கேட்டது.

" எடே தம்பி.. பிள்ளை.. நான் சொன்னன்... இண்டைக்கு காலமை இருந்தே காகம் கத்தினது.. ஆரோ வரப்போகினம் எண்டு.. பாத்தியே..."

"ஓமம்மா.. நானும் போன கிழமை யோசிச்சனான்.. ஒரு வருசமாச்சு... தம்பியை இங்காலைப்பக்கம் காணேல்லையெண்டு .. வந்திட்டான்.."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவிற்கும் ,அக்காவிற்கும் சந்தோசம் தாங்க முடியவில்லை.

" சொல்லு ராசா... எத்தனை நாள் நிப்பாய்? என்னென்ன வேணும்.. சில்லுக்கழி செய்து தரட்டே?" அம்மா ஆசையாய்க் கேட்டாள். சந்தோசமாயிருந்தது. அம்மாவை அணைத்துக் கொண்டான்.

"ஓமம்மா... எல்லாம் செய்யுங்கோ.. ஒரு பிடி பிடிக்கிறன்" அம்மாவோடு வந்து அடுக்களைக்குள் அமர்ந்து கொண்டான்.

காட்டின் மெல்லிய தடிகளை வெட்டி வரிசையாய்க் கட்டி களிமண் பூசப்பட்டு சிதிலமடைந்த கிடுகுகளை வெறும் குப்பைகளாய் மேலே தாங்கியிருந்த அடுக்களை அடுத்த பெருமழைக்கு தன் ஆயுளை முடித்துக் கொள்ள தயாராயிருந்தது. அண்ணாந்து பார்த்துக் கொண்டான்.

"பிள்ளை.... லோஜினி அக்காட்டைப் போய் பாதி தேங்காய் வாங்கியா... நாளைக்குத் தாறனெண்டு சொல்லி..." அக்கா வாங்கி வந்து இவனருகில் உட்கார்ந்து துருவத் தொடங்கினாள்.

" அக்கா என்ன மாதிரி உன்ர படிப்பெல்லாம்..போன முறை வரேக்க தொடர்ந்து படிக்கப் போறன் எண்டு சொன்னாய்.. எப்பிடிப் போகுது?" அக்கா நிமிர்ந்து நோக்கினாள்.

"ஓமடா.. நான் விரும்பினது கிடைச்சிருக்கு.. எண்டாலும் இஞ்சை அது செய்ய முடியாதடா... ஊருக்குத்தான் போகவேணும்.. என்ன செய்யிறதெண்டே விளங்கேல்லை.."

"இதிலையென்ன...? ஊருக்குப் போங்கோவன்..." இயல்பாய் அமைதியாய்ச் சொன்னவன் "ஓம் ராசா.. அப்பிடித்தான் யோசிச்சிருக் கிறம்..." என்று அம்மா சொல்லவும் தொண்டைக் குழிக்குள் ஏதோ அடைத்தது போல உணர்ந்தான்.

"வேறை என்னப்பன் செய்யிறது...? உன்ரை அப்பா போனாப்பிறம் உன்னை நம்பியிருந்தன்.. அதுவும் நடக்கேல்லை.. இனி இவள் ஒரு நிலைமைக்கு வந்தாத்தான் உண்டு... உன்ரை மாமாவும் கடிதம் போட்டிருந்தவர்.. பிரச்சனையில்லையாம்.. அவற்றை மகன் ராகுல னும் படிக்கத் தூரஇடம் தான் போறவனாம்.. பிரச்சனையில்லையாம்... என்னதான் இருந்தாலும் உன்னை விட்டிட்டு என்னண்டு போறதெண்டு..." அம்மா தொடர்ந்து பேச முடியாமல் நாத்தழுதழுத்தது. அழத்தொடங்கினாள்.



"ஏனிப்ப அழுகிறியள்... உதில பக்கத்தில தானே போகப் போறியள்.. வரவேணுமெண்டால் உடன வந்திட்டுப் போறன்..." உதட்டில் சிரிப்பை வரவழைத்துச் சொன்னபோதும் ஆழ்மனதில் ஏதோ அழுத்தியது.

அம்மா கண்ணீரைத் துடைத்துக் கொண்டு ஆர்வமாய்க் கேட்டாள்

"அப்ப அங்கை வருவியே..."

"ம்... வரலாம்.. வராமலும் போகலாம்.." அவன் முகம் இறுகியது. "ஆனா ஒண்டு நான் வாறனோ இல்லையோ நாங்கள் கட்டாயம் வருவோம்..."

அம்மாவுக்குப் புரியவில்லை' போலிருந்தது.

மதியச் சாப்பாடு முடித்துவிட்டு முற்றத்தில் நின்ற இளந் தென்னையின் கீழ் பாய் போட்டமர்ந்து கொண்டான். எதிர் வீடு வெறிச் சோடிக்கிடப்பது தெரிந்தது. காலையிலிருந்தே அம்மாவைக் கேட்க வேண்டுமென்றிருந்தான். சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. எதிர்வீட்டைச் சுற்றி நின்றிருந்த கச்சானும் , கீரையும் இன்னும் பலவும் இல்லாதொழிந்து அவ்விடத்தை புற்காடு ஆக்கிரமித்திருந்தது. தெரிந்த முகங்கள் கூட காலையிலிருந்து தென்படவில்லை.

"உந்த இடத்தில நல்ல காத்து வரும்.. பொறு தலையணை எடுத்தாறன்" அம்மா தலையணையைக் கொடுத்து விட்டு அருகில் அமர்ந்து கொண்டாள்.

"அம்மா.. உந்த முன் வீட்டுக்காரர் எங்கை போட்டினம்.. காலமை இருந்தே காணம்.." நிமிர்ந்து படுத்துக் கொண்டே கேட்டான்.

"அவையோ... இப்ப ஒரு ஐஞ்சாறு மாசத்துக்கு முன்னம் தான் அவை கொழும்புக்கு போனவை.."

"அப்பிடியே...உங்கை என்ரை வகுப்பில படிச்ச ஒருத்தி இருந்தவளெல்லே..." வெகு யதார்த்தமாயும் வெகு இயல்பாயும் இருக்கவேண்டுமென்பதற்காய் அதிக சிரத்தை எடுத்து அந்தக் கேள்வியைக் கேட்டான்.

"ஓ.. சர்மிலி எண்டு சொல்லி.. அவளின்ரை கலியாண அலுவலாத்தான் போயிருக்கினம்.. லண்டனில் ஆரோ மாப்பிள்ளையைப் பேசியிரிக்கினமாம்.." மெல்லிய இதயச் சுவரோரம் கூரிய ஊசியொன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லேசாய்க் கீறிச் சென்றது போலிருந்தது. அமைதியாயிருந்தான். கீற்றுக்கள் ஊடாக உள்நுழைந்த வெயில் தலையைச் சுட்டது.

"தம்பி... உன்னோட போனமுறை வந்தான்... அவன் வரேல்லையே..?" சில நிமிட நேரம் அங்கு நிலவிய அமைதியை அம்மா கலைத்தாள். அவள் நிலவனைத்தான் விசாரிக்கின்றாள் என்பது புரிந்தது.

"இல்லையம்மா...?"

"ஏன் ஏதேனும் சண்டையே உங்களுக்குள்ளை....?"

அம்மாவை சில கண நேரம் நேராய் நோக்கியவன் விழிகளை வானத்திற்கு வீசி விட்டுச் சொன்னான்.

"அவன் இனி வரமாட்டான் அம்மா.."

அம்மா புரிந்து கொண்டாள்.

"ம்ம்.. இங்கை வந்திருக்கேக்கை எவ்வளவு கலகலப்பாய் இருந்தவன்..ம் எப்பத்தான் இதுக்கெல்லாம் முடிவோ ?" அவளிடமிருந்து ஏக்கம் கலந்த பெருமூச்சொன்று வெளிப்பட்டது.

அம்மாவின் கன்னங்களில் நீர் கோடிட்டிருந்தது.

"சரி அம்மா நான் வெளிக்கிடப்போறன்.. " அவன் மோட்டார் சைக்கிளை உருட்டிக் கொண்டு வாசல் வரை வர அம்மாவும் அக்காவும் கூடவே வந்தார்கள்.

"இடையில ஒருக்கா முடியுமெண்டால் வந்திட்டு போ..."

"சரி..." என்ற போதும் இப்போதைக்கு முடியாதென்றே மனது சொல்லிற்று.

"கவனம் தம்பி போறது.. றோட்டில இறங்கினா கண்மண் தெரியாமல் உங்கட வாகனங்கள் தான் ஓடித்திரியுது.."

"தடை உங்களுக்குத்தான் இல்லை.. வாகனங்களின்ரை வேகத்திற்குப் போடலாம்" அம்மாவை இடைமறித்து அக்கா சொன்னாள். பலமாய்ச்சிரித்துக் கொண்டே ஏறி உட்கார்ந்தவன் கண நேரச் சிந்தனையின் பின் வேகமாய் இறங்கினான்.

"என்ன..?" அம்மா கேள்வியாய்ப் பார்த்தாள்.

"என்ரை டயரி.."

"நீ நில்.. நான் போய் எடுத்தாறன்.." அக்கா போய் எடுத்து வந்து கொடுத்தாள்.

"உன்ரை ஞாபகமாய் இதைத்தந்துவிட்டுப் போவன்." அவள்



கேட்கவும் "அதெப்பிடி....?" எனக் கேட்டவாறு வாங்கி எதேச்சையாய் புரட்டியவனின் கண்கள் கடைசிக்கு சில பக்கங்கள் முந்திய அவ்விடத்தில் நிலைக்குத்தி நின்றன.

'கிழிந்த கிடுகுகள் நிறைந்த வேலி
முற்றத்தின் மத்தியில்
பெயர் தெரியா
ஒரு ஒற்றைப் பூமரம்
எப்போதாவது
எனைச் சந்தித்து
சில மொழிகள் பேசும்
இரு விழிகள்....'

அந்தத்தாளை தனியே பிரித்தெடுத்து இரண்டாய் நான்காய் கிழித்து காற்றில் வீசினான். மெல்லிய இதயச் சுவரோரம் கூரிய ஊசி ஒன்று இலேசாய்க் கீறி சென்றது போலிருந்தது.

"இந்தாக்கா ... நீயே வைச்சுக்கொள்.."

அம்மாவின் கண்கள் சிவந்து போயிருந்தன. ஆறுமாதங்களாய் அவன் வருவான் என்றிருந்த நம்பிக்கை காலை அக்கா சொன்ன செய்தியிலிருந்து அடியோடு தகர்ந்து போயிருந்தது.

காலை வெகு சீக்கிரமாய் வீடு திரும்பிய அக்கா பதற்றமாய் உள்ளே ஓடி வந்து கட்டிக்கொண்டு அழத்தொடங்கிய போதும் அம்மாவிற்கு சிறிது நேரம் எதுவும் புரியவில்லை.

"என்ன பிள்ளை. வெள்ளன வந்திட்டாய்..ஏன் அழுகிறாய்.. வழியில ஏதாவது சேட்டை விட்டவங்களே.." அவளை அணைத்துக் கொண்டே கேட்டாள்.

"அம்மா.. தம்பியன் இனி வரமாட்டான் அம்மா.. அவன் இனி வரமாட்டான்.." அக்கா விக்கி விக்கி அழுதாள்.

"என்ன.." அதிர்ச்சி மின்னல் அம்மாவை கண நேரத்தில் தாக்கியது. அக்கா எல்லாம் சொன்னாள்.

"நான் பார்த்தேனம்மா... அது தம்பி தான்.. இழுத்துக்கொண்டு போனவங்கள்.. அதால போய் வந்த ரெண்டு மூண்டு சனமும் செத்துப்போட்டுதுகள். எல்லாரையும் கொண்டு போனவங்கள். கடைசியாய் அவனைப் பாக்கத்தான் முடியேல்லை.. கவலை தீர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தமாய் அழக்கூட முடியாமற் போட்டுதே.." அக்கா அழுகையை அடக்கிக் கொண்டு பேசினாள்.

கண்கள் சிவந்திருக்க அம்மா வாசலில் அமர்ந்திருந்தாள். 'கேற றை திறந்து கொண்டு மாமா வருவது தெரிந்தது. அவரது படபடப்பும் அவசரமும் விடயம் அவருக்கும் தெரிந்து விட்டது என்பதை உணர்த்தின.

"ஐயோ.. ஆண்டவா ஏன் இப்பிடிச் சோதிக்கிறாய்.." தலையில் அடித்துக்கொண்டு மாமா உட்கார்ந்தார்.

அம்மா அமைதியாய் உட்கார்ந்திருந்தாள். அவள் விழிகளில் இப்போது நீர் வழியாதிருக்க அவை எங்கோ வெறித்து நோக்கியிருந்தன. மாமா தொடர்ந்து அழுதுகொண்டிருந்தார்.

"எனக்குத் தெரியுமண்ணை.. நீங்க அழாதேங்கோ... இனியெல்லாம் நாங்கள் இதுக்கு அழக்கூடாது."

மாமா அம்மாவை நிமிர்ந்து நோக்கினார்

"எப்பிடி அழாமல் இருக்க முடியும்... போட்டு வாறன் எண்டு சொல்லிப் போட்டு காலமை வெளிக்கிட்டவன் அதுக்குடனை சவமா வந்தா எப்பிடி அழாமல் இருக்க முடியும்.."

"அண்ணை.. என்ன சொல்லுறியள்.."

எங்கோ வீசியிருந்த பார்வையை சடாரெனத் திருப்பிக் கேட்டாள் அம்மா

"ராகுலன்.. காலமை பள்ளிக்கூடம் போனவன்..போன இடத்தில இது நடந்து போட்டுது.. ஆஸ்பத்திரியில கொண்டு போய்ப் போட்டிருக்கிறாங்கள்.. கைசிதறிப்போய்..." மாமா தொடர்ந்தார். அம்மாவின் காதுக்குள் அக்கா சொன்னவை மீண்டும் மீண்டும் கேட்டன. 'அதால போய் வந்த ரெண்டு மூண்டு சனமும் செத்துப் போட்டுதுகள்'

"ஐயோ.. அநியாயமாய் அவனைப் பறிகொடுத்திட்டமே.... காலமையும் போகேக்கை இங்கை வந்து எனக்கென்ன மருந்து வேணுமெண்டு கேட்டுக் கொண்டு போனவன்.. ஐயோ கடவுளே.. இந்த அநியாயச் சாவுக்கெல்லாம் எப்ப தான் முடிவோ...?" அம்மா பெருங்குரலெடுத்து அழத்தொடங்கினாள்.

(சிந்தனையும் கற்பனையும்)



# ஆத்ம அருந்தி

சுஜந்தா சிவசுப்பிரமணியம்

சரித்திர நாவல்களினூடு சித்துப் பிரபஞ்சத்தினூடு,
சொல்லொணாத சொப்பனத்தினூடு - செருக்களமும்
செம்மீன் கொடியும் செஞ்சிக் கோட்டையும் செருனரின்
கழுவேற்றமும் குதிரைக் குளம்பொலியும் குருதிக்குழம்பிடை
குத்திட்டு நின்ற குறுவாளும் அணு துளைத்து ஆவி
நுழைத்து அஞ்சா நெஞ்சதனில் அழியா அளவிலாற்ற
மறத் தமிழர் நாமென மார்தட்டச் சொன்ன சிறப்பிலக்கண
உரித்தை மித்தையுணர்வு மல்கிய மாத்துவர் மலைவுதலினின்று
மடியாது பேண இச் சொற்பிரபஞ்சத்தில் மாகபிரளயம் தானின்று
நாளை - உண்மைப் போரில் உயிர் துறந்து வீரமரணமெய்தி
நான் வீழ்ந்து கிடப்பினும் தமிழனே! அன்று வந்தென்
நுதலின் மீது நாமமிட்டு, வாய்மை வழுவா வாய்க்கரிசியிட்டு
அதரங்களிடை அரவின் பால் வார்த்து,செவிதனில் செந்தமிழ்ப்பா ஓதி
சென்னி மீது செந்தீயிட்டு விடை கொடு ! எனதுணர்வுகளை மட்டும்
உடன் கொண்டு செல் காலத்தின் கடை நொடிப் பொழுது வரை !!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூவுக்குள் ஒரு நெருடல்

ஸ்ருதி

உறவொன்று கண்டுவிட்டு
உவகையுடன் உனைநாடி
சொல்லி வைத்தேன் என்மனதை
சேருமிடம் சொல்வாயென்று .....!
நிதம் என்னை நெருங்கி வந்தாய்
இதமாக வருடிச் சென்றாய்
சுதி இழந்து சுருங்கும் போது
சுகமாக ஏந்தி நின்றாய்
பூட்டி வைக்கும் பொறுமைகூட
உனைக்கண்டு பொங்குகிறது
ஊட்டிச்சென்றாய் உண்மைகளை
தட்டிச் சென்றாய் உணர்வுகளை
விட்டுச் செல்ல மனமின்றி
தொட்டுச் செல்லும் 'தென்றல்' நீ ....!
பார்ப்பதுவும் கேட்பதுவும்
வசமிழந்து நிற்பதுவும்
எதற்காக ? எனக்கேட்க !
பவ்யமாய் பதில் பகர்ந்தாய்
"உனக்குள் ஓர் நெருடல்" என்று .....!

மென்மையாகத் தீண்டிச்
செல்லும்
இளந்தென்றல் .... நீ
சேருமிடம் சென்று வந்து
கூறும் மொழி கேட்பதற்காய்
தினம் மலரத் துடிக்கின்றேன்
இனம் புரியாக்கலக்கத்தில் .....!
புயலாய் மட்டும் நெருங்காதே
இயலாது மலர்வதற்கு
மடல் சோர்ந்து வீழும் வரை
தென்றலே எனைத் தீண்டாதே....!
ஏனெனில்.............
பரவசமாய்ப்பார்த்து - புது
மணம் வீசப் பூத்து - நல்
உறவின் நினைவில் - மிதம்
மிடுக்குடன் மிளிர்வது .......!
"சிவந்திருக்கும் செவ்வந்திப்பூ"
என்பது இன்னுமா புரியவில்லை

---

**இணையத்தில்**

*www.uyirppu.cjb.net*

**லஞ்சம்**

வாங்கிய போது
கைதுசெய்தார்கள் .
கொடுத்த போது
விடுதலை செய்தார்கள்



# ஒருமரம் ஏன் தோப்பாகவில்லை?

- நம்மவன் -

ஈழத்தில் தமிழனின் வரலாறு எப்போதிருந்து ஆரம்பமாகியது? என்ற கேள்விக்கு பல நூற்றாண்டு காலங்களுக்கு முன்னரேயே என பதில் சொல்லிவிட்டுப் போவது சுலபம் ஆனால்.. அதற்கான ஆதாரங்களை தேடுவதில் , வெளியிடுவதில் நம்மில் யாருக்கேனும் அக்கறையிருக்கின்றதா என்று திருப்பிக்கேட்டால், மனவருத்தம் தரக்கூடிய பதில்தான் வந்தடையும்.

ஈழத்தில் தொன்மை மிகு தமிழன் வரலாற்றை சிதைத்தெறிந்து மழுங்கடித்து, மறைந்து விட வேண்டும் என்கின்ற ஓர்மத்தோடு செயற்படும் வரலாற்றுத் திரிபாளர்களின் ஆர்வத்தினையும், அவற்றையெல்லாம் முறியடித்து, உலகிற்கு உண்மையை உணர்த்த வேண்டும் என்கின்ற நம்மவர்களினது ஆர்வத்தினையும் கருத்திலெடுத்துக் கொண்டால் முன்னையது தான் முடிவிலியாய் நீளும்.

இத்தனைக்குமிடையில் மொழி, இனப்பற்றோடு தம் கலாச்சார விழுமியங்களை கட்டிக்காத்து, வீரமும் சோகமும் துரோகமும் இழையோடிய நம் வரலாற்று வழித்தடம் திசை மாறக்கூடாது என்பதற்காக தம் வாழ்வினை அர்ப்பணித்த யாராவது ஒருவர் நம்மிடையே இருக்கிறாரா? என உரத்துக் கேள்வியெழுப்பினால் இருந்திருக்கின்றேன் என கையுயர்த்துகின்றார் ஒருவர்.

கலைஞானி குரும்பசிட்டி செல்வரத்தினம் 'one man army' தனி மனித இராணுவம்) என்கின்ற ஆங்கில பதத்தை ஞாபகப் படுத்துகின்ற அற்புதமனிதன், திரளுவதற்கு வாய்ப்புக் கிடைக்காத அடம்பன் கொடி. ஆனாலும் மிடுக்குடன் மிளிர்ந்தது.

தமிழ்ப் பண்பாடு கூறும் கல்வெட்டுக்கள் , பழைய ஓலைச்சுவடிகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்பங்கள், பத்திரிகை நறுக்குகள், ஓவியங்கள் என அத்தனையுமே தன் தனிமனித வலுக்கொண்டு பத்திரப்படுத்தி வைத்திருந்தார் கலைஞானி.

ஈழத்தில் தமிழன் வந்தேறு குடியல்ல. அவனுக்கென நீண்டதொரு வரலாறு உண்டு என அடிக்கடி உறுதிப்படுத்தும் அவருக்கு இவ்வாறான தொரு எண்ணம் எப்படி ஏற்பட்டது? சுவை ததும்ப அவரே கூறுகின்றார்.

"1947ம் ஆண்டு மாசி மாதம் 23ந் திகதி பாடசாலை மாணவனாக இருந்த எனக்கு சித்திர ஆசிரியர் திரு.கந்தையா சரியாக படங்கீற வில்லை என்பதற்காக தண்டித்தார். அத்தண்டனையின் தழும்புகள் முதுக்குப் புறத்தில் படிந்திருந்தன. அவற்றை பெரிய ஆச்சியோ அல்லது வீட்டிலுள்ளவர்களோ கண்டு விடக்கூடாது என்பதற்காகத் துவாய்த்துண்டு ஒன்றினால் முதுகைப் போர்த்தியபடி கிணற்றடியில் மரங்களின் அடியில் கிண்டிக் கிளறிக்கொண்டிருந்தேன். அப்போது மூன்று காசுகளும் , ஒரு சங்கும் என் கண்ணில் பட்டது அதனை எடுத்துப்பத்திரப்படுத்திக் கொண்டேன். பின்னர் அவற்றை நான் படித்த யூனியன் கல்லூரியில் காட்சிக்கு வைத்தேன். அதற்காக எனக்கு இரண்டு வெள்ளிப்பதக்கங்கள் பரிசளித்தார்கள் அன்றுமுதல் 'antiques' எனப்படும் தொல்பொருள் மற்றும் அரும் பொருட்களை சேர்க்கலானேன்.



மாமனிதன் கலைஞானி

இத்தகைய அதீத முயற்சியில் கலைஞானி கண்ட, கடந்த இடர்பாடுகள் ஏராளம். தன் முயற்சிகளுக்கு யாருமே ஆதரவுக் கரம் நீட்டி தன்னோடு இணைய வில்லை என்கின்ற ஆதங்கம் இவருக்கு இறுதிவரை இருந்தது.

தமிழின புத்திஜீவிகள் எனப்படு வோர் இவரது சேகரிப்புக்களை அறிவியற் பார்வையற்றது என நிராகரித்தமையானது தமிழினத் தின் துரதிஷ்டம் ஒன்று என்றே குறிப்பிட வேண்டும்.

இருந்த போதும் 1991ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடந்த முத்தமிழ் நிகழ்வின் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு.வேலுப்பிள்ளை



பிரபாகரன் அவர்களால் "மாமனிதர்" பட்டம் வழங்கிக் கௌரவிக்கப் பட்டமையானது குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒரு விடயமாகும்.

பெறுமதி உணர்ந்த வெளிநாட்டவர்கள் பலர் அவரது சேகரிப் புக்களை கொள்முதல் செய்ய முன்வந்ததையும் அதற்கு அவர் உடன் படாததையும் பல பேட்டிகளின்போது கலைஞானி குறிப்பிடுகின்றார்.

"ஈழத்துப் பாரம்பரியம் எமைவிட்டு வெளியே எங்கும் போகக் கூடாது. கொழும்பிலிருந்து கார் வாடகைக்கு அமர்த்தி வந்திருந்த அமெரிக்கத் தம்பதிகள் 50000 ஸ்ரேலிங்பவுண் விலைக்கு எனது சேகரிப்புக்களை விலை பேசினார்கள். ஆனால் நான் மறுத்துவிட்டேன் என பெருமையுடன் கூறுகின்றார்."

வழமைபோலவே இந்நாட்டின் கொடிய யுத்தம் கலைஞானியின் கடும் உழைப்பின் மீதும் தன் கோரப்பற்களை பதித்துச் சென்றது.

86ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கடும் ஷெல் வீச்சுகளுக்கும் விமானக் குண்டு வீச்சுக்களுக்கும் தப்பிய எஞ்சிய அவரது சேகரிப்புக்கள் 1995 இடம்பெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ் இடப்பெயர்வோடு முற்றாக என்று சொல்லக்கூடிய அளவிற்கு அழிந்து போயின. அச்சம்பவத்தை சோகம் ததும்பிய விழிகளோடு கலைஞானி நினைவு கூறுகின்றார்.

"வந்து பார்த்தபோது பணிமனைக்குள் செல்ல முடியவில்லை பின்னர் பல நாட்கள் பலத்த முயற்சிகளின் பின்னர் தான் கை கூடியது. உள்ளே போனால் கண்டவையும் காணாதவையும் தலையைச் சுற்றச் செய்தன. 2500 ஆண்டு பழைமை வாய்ந்த நாணயம், பவுண், வெள்ளி, நாணயங்கள் உட்பட சகல நாணயங்களும் தொலைந்து விட்டன. ஆறுமுகநாவலரின் சொந்தக் கையெழுத்திலான புத்தகம் சுவாமி ஞானப்பிரகாசரால் தாவீது அடிகளுக்கு 1926ம் ஆண்டு எழுதிய கடிதம்... இப்படிப்பல.. எல்லாமே அழிந்துவிட்டன. மரச் சிற்பங்கள் கோடாரியால் பிளக்கப்பட்டிருந்தன."

அதற்குப்பின்பதாகவும் அயராத முயற்சியோடு எஞ்சிய பொக்கிஷங்களை பாதுகாத்து வந்த அந்தத்தனிமரம் இந்த வருடத்தின் ஆரம்பத்தில் தன் வாழ்வினை முடித்துக்கொண்டது. நாமெல்லோரும் ஒரு முறை தலை கவிழ்ந்து அவருக்காய் அஞ்சலி செலுத்த வேண்டாம். எங்களுக்காய் வெட்கப்பட்டுக் கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதவியுமோர் மாணிக்கம்

ரின்ஸோசா

சிலப்பதிகாரக் காப்பியத்திலோ
காவியநாயகி அல்லதான் - எனினும்
சிலம்புடைக்காவிடினும் கற்பில்
சிறிதும் அவள் குறைந்தவளல்ல !

காலம்செய்த சதியால் கலையரசி
கனிகையர் குலத்தில் பிறந்தாள்
விதி செய்த வினையால் கோவலனுக்கு
காமக்கிழத்தியாக்கப்பட்டாள் !

கனிகையர் குலத்தில் பிறந்தாலும்
கற்பிழக்காது காளையொருவனையே
கணவனாய்க்கொண்டு வாழ்ந்தவள்
காண்போர் கண்களுக்கு கறைபடிந்தவளானதேன்?

கோவலன் கொல்லப்பட்டதால் கண்ணகி
கொழுத்தி எரித்தாள் மதுரையையே
மணாளன் மறைவால் துறவு பூண்டு
மனிதருள் மாணிக்கமானாள் மாதவி !

தன்குலத்தை வெறுத்து தீதகற்றி
'ஒருவனுக்கே வாழந்து உயிர்நீத்தாள்
பரத்தையர் பலரைப் பாவங்களிலிருந்தும்
விடுபட்டு விடுதலையாக வழிசமைத்தாள் !

மாதவிஎன்பவள் மறுவற்றவளே - இவளை
மாசுபடுத்திப் பார்க்காதீர்கள்!
விதியால் பிடிக்கப்பட்டு வதைக்கப்பட்டவளை
விரோதியாக்கி சிலம்பினைப் படிக்காதீர்கள் !



# 'தடை' தாண்டுமா சமாதானம்?

அரசியல் களம் நி.கெனடி

இலங்கை அரசியலில் ஏற்பட்டு வரும் மாற்றங்களை உன்னிப்பாக அவதானித்து வரும் சர்வதேச நாடுகளினது மட்டுமல்ல இலங்கையின் அனைத்து இன மக்கள் அனைவரது மனங்களிலும் பொதுவான கேள்வி இன்று இதுதான்!

**நீக்கப்படுமா ?**

நீக்கப்படவேண்டும் என்கிறது,தமிழர் உரிமைக்கானஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு இருக்கும் புலிகள் தரப்பு. இவ்வாறான, தம் மீதான தடை நீக்கப்பட வேண்டும் என்கின்ற அவர்களது கோரிக்கை இன்று நேற்று எழுந்ததொன்றல்ல.

முன்னைய சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக் காலத்தில் நோர்வே அரசின் அனுசரணையோடு சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்ட காலப் பகுதியிலே இக்கோரிக்கை அவர்களால் முன்வைக்கப்பட்டது.

ஆனால் நிபந்தனையற்ற பேச்சுக்கு தயார் என அறிவித்து விட்டு, புலிகள் நிபந்தனைகளை ஒன்றின் மேல் ஒன்றாக விதிக்கிறார்கள் என அரசு அக்கோரிக்கைகளை மட்டுமல்ல சமாதான முயற்சிகளில் ஈடுபட்டிருந்த நோர்வே பிரதிநிதி எரிக்சொல் ஹெய்மையும் புறந்தள்ளியது.

புலிகள் மேற்கொண்ட நான்கு மாதகால ஒரு தலைப்பட்ச மோதல் தவிர்ப்பு முடிவுக்கு வர வட பகுதியில் யுத்தம் அக்கினியாய்ச் சுவாலையெடுத்தது. இந்நிலையில் மீண்டும் புதிய அரசின் சமாதான முன்னெடுப்புகளின் போது தம் மீதான தடை நீக்கப்பட வேண்டுமென்பது புலிகளது நிபந்தனையா.... கோரிக்கையா .....?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிச்சயமாய் கோரிக்கை தான் என்கிறது புலிகள் தரப்பு ஒரு நாட்டில் தடை செய்யப்பட்ட, சட்ட ரீதியற்ற அமைப்பாக இருந்து கொண்டு சமாதானப் பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்வது எவ்வாறு தார்மீக நியாயமாகும் எனக் கேட்கின்றார் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இதனை ஒரு நிபந்தனையாக அல்லாமல் யோசனையாக அரசுக்குத் தெரிவிப்பதாக அண்மையில் மல்லாவியில் பத்திரிகையாளர்களைச் சந்தித்த அவர் மேலும் தெரிவித்தார்.

> **புலிகள் மீதான தடை, சமாதானத்திற்கான தடையாகி விடக்கூடாது என்பதே எல்லோருடைய எதிர்பார்ப்பும் ஆகும்.**

இக்கோரிக்கையினை புலிகள் வலுவாகப் பற்றிப் பிடிப்பதற்கு என்ன காரணம் ? சர்வதேச அரங்கில் காய்களை நகர்த்தும் அவர்களது அரசியல் மூளைச் செயற்பாடுகளில் இதுவும் ஒன்றா! என்ற கேள்வி எழாமல் இருப்பதனையும், இலங்கையில் தடை நீக்கப்படுவதன் மூலம் சர்வதேச தடைகளை எதிர் கொள்வது இலகுவானதாய் விடும் என அவர்கள் கருதுகிறார்களா என சிந்திக்காமல் இருப்பதனையும் தடுக்க முடிய வில்லை.

ஆனால் புலிகள் மீதான தடை இலங்கையில் நீக்கப்படுதல் அமெரிக்க வெளியுறவுக் கொள்கையில் எவ்வித மாற்றத்தினையும் ஏற்படுத்தமாட்டாது என அமெரிக்கா முந்திக் கொண்டு அறிவித்திருக்கின்றது. அமெரிக்காவில் புலிகள் மீதான தடை தொடர்ந்தும் தொடரும் என்பதனை இக்கருத்து கோடிட்டு காட்டுகின்றதாயினும் உள்நாட்டில் தடைநீக்கப்படுவதில் எவ்வித ஆட்சேபனையும் அமெரிக்காவிற்கு இல்லை என்பதனையும் உட்கொண்டிருக்கிறது.

இனப்பிரச்சனையில் ஒரு காலத்தில் செல்வாக்குச் செலுத்திய இனியும் செல்வாக்குச் செலுத்த வேண்டுமெனபலரும் எதிர்பார்க்கின்ற இந்தியாவும் புலிகள் மீதான தடை தொடரும் என அறிவித்து விட்டது. பிரிட்டனும் இதே கருத்தினையே தெரிவித்திருக்கின்றது. ஆக புலிகள் எதிர்பார்ப்பதாக கூறப்படும் இவ்விலக்குகள் எட்டப் பட்ட முடியாதவையாகவே இருக்கப் போகிறது. இந்நிலையில் தடைசெய்யப்பட்ட அமைப் பொன்றுடன் நடாத்தப்படும் பேச்சுவார்த்தை முடிவுகளில் எட்டப்படும் விடயங்களை அமுல்படுத்துவதில் சட்டப் பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டியேற்படலாம் என சட்ட வல்லுநர்கள் நியாயமான அச்சத்தை எழுப்பியிருக்கின்றனர்.

### தொடர்பிலும் முறிவிலும்

புதிய அரசு இத்தடை விவகாரத்தினை எவ்வாறு கையாளப் போகின்றது. தடை எதிர்ப்பாளர்களுக்கு பதில் சொல்லி ஆக வேண்டிய நிலையில் அண்மையில் பாராளுமன்றத்தில் பிரதமர் தனது கொள்கை விளக்கப் பிரகடனத்தை வெளியிட்டார். புலிகள் மீதான தடைமூலம் சர்வதேசரீதியில் கிடைத்து வரும் சமாதானத்திற்கான ஒத்துழைப்பை இழக்க வேண்டியேற்படலாம் என அப்போது அவர் தெரிவித்திருப்பதன் மூலம் அவர்கள் மீதான தடை இலங்கையில் நீக்கப்படுவது உறுதியாகிவிட்டது என பெரும்பான்மைத் தமிழர்களுக்கு நம்பிக்கை ஊட்டுவதாயும் பேரினவாதிகளுக்கு கடும் எரிச்சலை ஊட்டுவதாயும், சிங்கள, தமிழ் , ஆங்கிலப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன. ஆனாலும் தடைநீக்கம் தொடர்பான தெளிவான பார்வை வீச்சு அப்பிரகடனப் பேச்சில் இல்லை எனத் தெரிவிக்கும் அரசியல் ஆய்வாளர்கள் பேரினவாதிகளைத் திருப்திப் படுத்த வேண்டிய நிலையில் பிரதமர் இருப்பதனையும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்நிலையில் பேச்சுவார்த்தை தொடர்பிலும் அல்லது முறிவிலும் அடுத்துவரும் காலப் பகுதிகள் இலங்கையின் அரசியல் வரலாற்றுப் பகுதிகளில் தடித்த சாய்ந்த மற்றும் அடிக்கோடிடப்பட்ட எழுத்துக்களில் குறிக்கப்பட வேண்டியனவாகவே இருக்கப் போகின்றன.

> **"இது சமாதானத்திற் கான இறுதிச் சந்தர்ப்பம். இதனை நழுவ விட நான் தயாரில்லை"**
>
> **ரணில் விக்கிரமசிங்க**
>
> **பிரதமர் , இலங்கை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகிடி வதை



ஒழுக்கத்தை ஓம்ப வைக்க
ஒழுங்கமைத்த திட்டமாம்
கற்கைக்கு அறிவுரை பகர
கண்டெடுத்த மார்க்கமாம்
வாழ்க்கைக்கு வழிகாட்ட
வடிவமைத்த பாதையாம்

மற்றவர் சொல்லி வந்து
மாண்பாய் உள் மனத்தினிலே
சத்திய ஜோதியாய் சுடர்விடும்
சாமான்ய சொல்லில்லை ஒழுக்கம்

ஒழுக்கத்தை புகட்டிட இங்கு
ஒழுக்கமற்ற செயல்கள்
வழி சமைத்துக் கொடுத்திடுமா ?
வினை விதைத்தவனின் தினையின் எதிர்பார்ப்பா ?

பதினைந்து வருடம் காத்திருந்து
பள்ளிப் படிப்பு முடித்து
பல்கலை ஏகியவனின் படிப்பிற்கு
பகிடிவதை மிரட்டலே அறிவுரையா ?

வழிகாட்டல்கள் இங்கு
வரம்பு மீறியதால்
வக்கிரமாயப் பல உயிர்கள்
வாழ்வின் வாயிலிலேயே வீழ்த்தப்பட்டனவே!





வாய்ச் சொல்லால் சுட்ட வடு
வாழ்வீறாக ஆறாதென்பது
கலைக்கூட அகராதிகளில் மட்டும்
காணாமல் போனதேனோ ?

நாகரிக வளர்ச்சியில்
நகர்ந்து கொஞ்சம் பின் சென்று
மனிதனுள் மனிதம் மரணித்து
மிருகம் ஜனனிப்பது இதில் !

உன் மனச்சாட்சிக்கு நிஜமாய்
ஒரு கணம் சிந்தித்துப்பார்
பானையில் இருந்தால்த் தானே
அகப்பையில் வரும்

உள் மனதில் கொண்ட
உண்மையான வக்கிரங்களும்
ஒருக்கடிக்கும் எண்ணங்களுமே - ஓங்கி
ஒலிக்கின்றன நீவிர் அறியாமலே !

அப்பாவிகளின் கண்ணீர்த்துளிகள் தான்
இப்பாலைகளை சோலையாக்குமெனின்
இங்கு சோலைகளே வேண்டாம்
பாலையாகி இம்மண் வரண்டு வெடிக்கட்டும் !
சுதந்திரக் குளிர்காற்று உனை
சூடாகத் தழுவும் பரிதாபம் இனியும் வேண்டாம்

**தொடர்புகளுக்கு**

**"உயிர்ப்பு"**

31, காசல் ஒழுங்கை,
கொழும்பு-04.

மின்னஞ்சல்
uyirppu@hotmail.com

இணைய முகவரி
www.uyirppu.cjb.net



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகைச் சுதந்திரம் என்பது வெறும் போலிச் சொற்றொடர்

**பத்திரிகையாளர் ஆர்.சிவகுருநாதன்**

**மூத்த பத்திரிகையாளரும் தினகரன் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியரும், கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் தற்போதைய தலைவருமான திரு. ஆர். சிவகுருநாதன் அவர்கள் பத்திரிகை மற்றும் தமிழுலகில் பலராலும் நன்கு அறியப்பட்டவர். பத்திரிகையோடு எனது வாழ்வையே அர்ப்பணித்தவன் என்று கூறிக்கொள்வதில் நான் பெருமையடைகிறேன். எனக்கூறும் இவர் சட்டத்துறையிலும் கணிசமான பங்களிப்பை மேற் கொண்டவர். அண்மையில் உயிர்ப்பு இதழின் செவ்விக்களம் பகுதிக்காக அவரை அவரது இல்லத்தில் சந்தித்தோம்.**

**நீங்கள் கடமையாற்றிய தினகரன் உள்ளிட்ட அனைத்து ஏரிக்கரைப் பத்திரிகைகளையும் எடுத்துக்கொண்டால் இலங்கையில் அரசமாற்றம் ஏற்படும் சந்தர்ப்பங்களி லெல்லாம் அவைகளின் செய்தி சொல்லும் தொனியில், நோக்கில், சார்புகளில் பெருமளவு மாற்றங்கள் ஏற்படுகின்றன. இது எந்த வகையில் பத்திரிகை தர்மமாகும் ?**

இந்த ஏரிக்கரைப் பத்திரிகை நிறுவனத்தை நிறுவிய டி.ஆர்.விஜயவர்த்தனா (முன்னாள் மறைந்த ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் தாயின் சகோதரர்) அவர்களின் நோக்கம் உண்மையில் வேறுவிதமாகத்தான் இருந்தது. இந்திய சுதந்திரப் போராட்டத்தின்பால் ஈர்க்கப்பட்ட அவர் இலங்கையின் சுதந்திரம் குறித்த தேவையினையும் மக்களுக்கு உணர்த்த வேண்டும் என்ற நோக்கோடுதான் ஏரிக்கரை நிறுவனத்தை ஆரம்பித்தார். அடிப்படையில் டி.ஆர்.விஜயவர்த்தனா கூட ஓர் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளராகவே இருந்தார். இந்நிலையில் இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்து ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தது. டி.ஆர்.விஜயவர்த்தனா ஒரு ஐ.தே.கட்சி ஆதரவாளராய் இருந்ததாலேயோ என்னவோ ஏரிக் கரையை அரசு பொறுப்பேற்க முன்னரும் கூட அது ஐக்கிய தேசிய கட்சி ஆதரவுப் பத்திரிகையாகவே திகழ்ந்ததை சுட்டிக்காட்ட வேண்டும்.

அப்போதிருந்த எதிர்க்கட்சியான சுதந்திரக் கட்சியினர் ஆளும் அரசு ஏரிக்கரையினை பொறுப்பேற்றதனை கடுமையாக எதிர்த்தனர். என்எம்.பெரேரா தலைமையிலான கோஷ்டியினர் லேக்ஹவுசை ஏன் பொறுப்பேற்க வேண்டுமென ஒரு புத்தகமே வெளியிட்டனர். ஆனாலும் சுதந்திரக் கட்சி ஆட்சிக்கு வந்த போது அதுவும் தனது பொறுப்பிலேயே லேக்ஹவுஸை வைத்திருந்தது. உண்மையில் ஆளும் அரசுகளுக்கு இது ஒரு சிறந்த பிரச்சார ஊடகம். இதனைச் சுதந்திரமாக இயங்க



அனுமதிக்க அவர்கள் ஒரு போதும் இடமளிக்க மாட்டார்கள் என்றே நான் கருது கின்றேன். அரசைப் பலப்படுத்துவதற்கு அரச சொத்தை பயன்படுத்துவதில் தவறில்லை என்றே அவர்கள் நியாயம் கற்பிக்கின்றார்கள். செய்திகள் பக்கச் சார்பாக திணிக்கப்படுகின்றன. அதுவும் சந்திரிக்கா அரசின் பின் மிக மோசமாக இது நடைபெற்றது. ஏரிக்கரை பத்திரிகையின் நம்பகத்தன்மை அற்றுப் போனதற்கும் மக்கள் மத்தியில் செல்வாக்கு இழந்ததற்கும் இதுவே காரணமாயிருக்க வேண்டும்.

**இரு பிரதான அரசியல் கட்சிகளும் இலங்கையின் ஆட்சிப்பீடத்தில் அமர்ந்திருந்த வெவ்வேறு காலப்பகுதிகளில் அவை ஒவ்வொன்றினதும் ஊதுகுழலாகச் செயற்பட்ட ஒரே பத்திரிகையில் நீங்கள் பிரதம ஆசிரியராகச் கடமையாற் றியிருக்கிறீர்கள் அந்நிலையை எவ்வாறு எதிர் கொண்டீர்கள் ? மனதளவில் அது சங்கடத்தை ஏற்படுத்த வில்லையா ?**

ஆமாம் .. இங்கே நான் கடமையுணர்ச்சியைப் பற்றி சொல்ல வேண்டியிருக் கிறது. அவர்கள் (அரசுகள்) ஒவ்வொருவரும் என்னிடம் நம்பி ஒரு பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார்கள். நான் அவர்களுக்கு எதிராக எதுவும் செய்யக்கூடாது. உண்மையில் ஏரிக்கரைப் பத்திரிகைகள் மட்டுமல்ல உதாரணத்திற்கு கம்யூனிசப் பத்திரிகைகளை எடுத்துக் கொண்டால் அக்கட்சிக்கு எதிராக அங்கே எதுவும் எழுத முடியாது. ஏன் உங்கள் உயிர்ப்பினை எடுத்துக் கொள்ளுங்கள் அதனை தமிழாலயம் வெளியிடு கின்றது. தமிழாலயத்திற்கென ஒரு அரசியல் பார்வை இருக்கும் அதனை மீறுவதாக உங்கள் இதழில் எழுத முடியுமா ? முடியாது இன்னமும் உண்மையைச் சொல்லப் போனால் இந்தப் பத்திரிகைச் சுதந்திரம் என்பதே வெறும் போலிச் சொற்றொடர்.



"பத்திரிகைக்காக என் வாழ்வையை அர்ப்பணித்தவன்"

"பத்திரிகையியல் ஒரு உத்தரவாதமற்ற பாதுகாப்பற்ற தொழில்"

"தமிழ்ச் சங்கம் ஒரு முதியோர் இல்லமாகவே தோன்றுகின்றது "

"எதற்காக நான் தமிழ்ச் சங்கத்தில் இருந்தேன் என்று கூட சிந்தித்ததுண்டு"

**தற்போது கொழும்பத் தமிழ்ச்சங்கத்தின் தலைவராக இருக்கின்றீர்கள் தமிழ்ச்சங்கத்தின் செயற்பாடுகள், திட்டங்கள் குறித்து சொல்வீர்களா ?**

தமிழ்சங்கம் 60 வருட காலப்பழமை கொண்டது அதனது ஒரே நோக்கம் தமிழ்வளர்ச்சி . . ஆனால் முக்கியமான ஒரு பிரச்சனை எங்களிடம் போதிய பணபலம் இல்லை. உண்மையில் இன்றைக்கு சங்கத்தினை ஓரள விற்கேனும் முன்னோக்கி கொண்டு செல்வதற்கு அங்கு நடாத்தப்படுகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியார் கல்வி நிறுவனம்தான் காரணம். என்னுடைய ஆதங்கம் என்னவெனில் தமிழ் மக்களிடையே இவ்வாறான முயற்சிகளுக்கு ஆதர வளிக்க வேண்டும் என்கின்ற ஆர்வம் இல்லை. வசதிகள் இருந்தபோதும் தியாக உணர்வு அவர்களிடம் இல்லை. தவிரவும் தமிழ்ச்சங்கத்தின் செயற்பாடுகளில் இளைஞர்களை காண்பதே அரிதாயிருக்கிறது. அது ஒரு முதியோர் இல்லமாகவே எனக்குத் தோன்றுகிறது.

தமிழ்ச்சங்கத்தின் எதிர்காலச் செயற்பாடுகளைப் பொறுத்தவரை நாங்கள் எதிர்நோக்குகின்ற மிகமுக்கியமான பிரச்சனை என்னவென்றால் நடைமுறை யில் உள்ள செயற்குழு ஒரு முடிவெடுத்த பின்னர் அடுத்துவரும் செய ற்குழு அம்முடிவு சரியில்லை, கைவிட்டுவிடலாம் எனச் சொல்லும். நான் சென்றமுறை தலைவராக தெரிவு செய்யப்பட்டு அபிவிருத்தி ஏதாவது செய்யலாம் என முயல்கையில் அடுத்த தலைவர் தெரிவு குறித்து யோசிக்க வேண்டியிருக்கிறது. உண்மையில் எதற்காக நான் இதிலே இருந்தேன் என்றுகூட சில சமயம் நான் சிந்தித்ததுண்டு.

## செவ்விக்களம்

இறுதியாக இலங்கையில் பத்திரிகையாளர் நிலைபற்றி

நிச்சயமாக கூறவேண்டும் . முக்கியமாக சேவைப் பாதுகாப்பு இல்லை, உத்தரவாதம் இல்லை என்பன பெருங்குறைபாடுகளாகும் சில வேளைகளில் இப்பத்திரிகைத் துறையை தேர்ந்தெடுத்தது சரியா பிழையா என்று கூட சிந்தித்ததுண்டு. உண்மையில் பத்திரிகையினை முழுநேரத் தொழிலாக கொள்வது இலங்கையில் மிகவும் சிரமமானது. என்னோடு இணைந்திருந்த ஒருவர் இறுதிக்காலத்தில் மிகவும் சிரமப்பட்டு பின்னர் ஒருவாறு கனடா சென்று அங்கு இறந்து விட்டார். இன்னுமொருவர் தினபதி பத்திரிகை யில் கடமைபுரிந்தவர். இப்பொழுது வெள்ளவத்தை பம்பலப்பிட்டி பகுதி களில் பிச்சை எடுத்துக்கொண்டு திரிகிறார். இலங்கையில் பத்திரிகை யாளர்களின் நிலைபற்றி விளக்க இந்த ஒரு உதாரணமே போதுமென நினைக்கின்றேன்.

நம்முடைய கேள்விகளுக்கெல்லாம் பொறுமையோடு பதிலளித்த ஆர். சிவகுருநாதன் அவர்கள் ஊடக மற்றும் எழுத்துத்துறையில் ஆர்வம் கொண்ட இளைஞர்களுக்கான பத்திரிகையாளர் பயிற்சிப் பட்டறை யொன்றினை தமிழ்ச்சங்கம் ஏற்பாடு செய்து நடாத்தி வருவதாயும் அதில் கலந்து கொள்ளுமாறும் வேண்டுகோள் ஒன்றினையும் விடுத்தார்.

— சந்திப்பு உயிர்ப்புக்குழு



# வாழ்த்துகின்றோம்

புதிதாய்,புயலாய், புலர்வாய் - காலப்
பதிவாய், கலையாய் ஒளியாய் - தமிழ்
நதியாய், நனவாய் நெருப்பாய்
உதித்தாய் உணர்வாய் உயிர்ப்பாய்



Dr.G. உதயசீலன்

Dr.I.ஜெபநாமகணேசன்

யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலத்திலிருந்து தாய் நிலத்திற்கு பலம் சேர்ப்போம்

விழுந்தாலும் உயிர்ப்போம் .. விரைவோம் இனி
அழுவோமோ இல்லை ஆண்டாண்டாய்
விழுதூன்றி வேரோடி விளைந்தோம் எமை
கழுவேற்ற நீளுமோ பிறர்கை

வாழ்த்துகின்றோம்

www.tamilwebradio.com

E.S.Printers - 257/11,Galle Road, Wellawatte. T.P : 01-590462

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org